பக்கங்கள்:- பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா. 6.00

# வலம்புரி

## The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27.06.2003) தொலைபேசி - 2223378 ஒலி 190

ஆசியா கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

### குடாநாடு விழாக்கோலம்

# இன்று பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு!

## இலட்சக்கணக்கான மக்கள் அணி திரள்வர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மக்கள் தமது உணர்வெழுச்சியினை ஓங்கி ஒலிக்கச் செய்யும் மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வு,இன்று யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக இடம் பெறவுள்ளது.

“எமது நிலம் எமக்கு வேண்டும்” என்ற உரிமைத் தொனிப் பொருளில் ,யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் இவ்வெழுச்சி நிகழ்வில் அலை கடலென மக்கள் திரளவுள்ளனர்.

நிகழ்வுக்கு முன்னதாக பேரணியாகச் செல்லும் மக்கள் பல்கலைக் கழக மைதானத்தில் கூடுவர்.

(10ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு

## விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

(கொழும்பு)

கடந்த 14-ம் திகதி சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்த 12 புலி உறுப்பினர்களும் எங்கு இருக்கி றார்கள் அவர்கள் கடற்படையால் தடுத்துவைக்கப்பட்டு இருக்கிறார் களா என்பது பற்றி எங்களுக்கு எந்தவிதமான தடயமும் கிடைக்க வில்லை.

இவ்வாறு யுத்த நிறுத்தக். கண்-காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹக் ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பி.பி.ஸி தமி ழோசைக்கு வழங்கிய செவ்வியி லேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கப்பலில் இருந்த விடுதலைப் புலி கள் உயிரிழந்தமை பற்றி எங்க ளுக்கு எந்தத் தடயமும் கிடைக் கவில்லை.

இலங்கைக் கடற்படைதான் அந் நேரத்தில் அங்கு இருந்தது.அது

(10ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்பார்

### கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா

இராணுவம் மற்றும் பொலிஸ் புல னாய்வுத்துறை உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதாகவும்.வடக்கின்

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார் என்றும் எதிர்

## பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பொலிஸார் பூரண ஆதரவு

# விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

(கொழும்பு)

கடந்த 14-ம் திகதி சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்த 12 புலி உறுப்பினர்களும் எங்கு இருக்கிறார்கள் அவர்கள் கடற்படையால் தடுத்துவைக்கப்பட்டு இருக்கிறார்களா என்பது பற்றி எங்களுக்கு எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை.

இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கப்பலில் இருந்த விடுதலைப் புலிகள் உயிரிழந்தமை பற்றி எங்களுக்கு எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

இலங்கைக் கடற்படைதான் அந் நேரத்தில் அங்கு இருந்தது.அது

(10ம் பக்கம் பார்க்க)

கழக மைதானத்தில் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக இடம் பெறவுள்ளது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற உரிமைத் தொனிப் பொருளில் ,யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் இவ்வெழுச்சி நிகழ்வில் அலை கடலென மக்கள் திரளவுள்ளனர்.

நிகழ்வுக்கு முன்னதாக பேரணியாகச் செல்லும் மக்கள் பல்கலைக் கழக மைதானத்தில் கூடுவர்.

(10ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்பார்

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது வசம் எடுத்துக் கொள்ள முயற்சி செய்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குட்பட்டிருப்பதாகவும்,தெற்கின் பாதுகாப்பு நிலவரம் சீர் குலைந்து இரா்ணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுத்துறை உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதாகவும்.வடக்கின் பாதுகாப்பு சீர் குலைந்திருப்பதாகவும் கவலை கொண்டுள்ள ஜனாதிபதி நா்ட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற வகையில் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை வடக்கின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிட்டதென்று குற்றம் சாட்டிய ஜனாதிபதி 10 நாட்களில் விடுதலைப் புலிகள் வட பகுதியைக் கைப்பற்றக் கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

# பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பொலிஸார் பூரண ஆதரவு

## நேற்றைய சந்திப்பில் டீ.ஐ.ஜீ உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்றுப் பிற்பகல் வடபகுதி பொலிஸ் டீ.ஐ.ஜீ விதாரணவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு சுமூகமான முறையில் நடைபெற பொலிஸார் உதவ வேண்டும் என்று இச் சந்திப்பின் போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் மேற் கொள்ளும் எழுச்சி நிகழ்வுக்கு பொலிஸார் இடையூறு விளைவிக்கக் கூடாதென்றும் ஒன்றியப் பிரதிநிதிகள் பொலிஸாரைக் கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை ஜனநாய ரீதியாக வன்முறையில்லாமல் நடைபெறுகின்ற எந்த நிகழ்வுக்கும் தாம் தடையாக இருக்கமாட்டோம் என்றும் பொஙகு தமிழ் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்க தாம் ஆவலாக இருப்பதாகவும் டீ.ஐ.ஜீ விதாரண தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளையில் இடம் பெற்ற இச் சந்திபில் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன்,இ.பேணாட் அடிகளார்,யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் டி.பகீரதன்,செயலாளர் செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ)

# புலனாய்வுப் பிரிவினரின் படுகொலை தேசிய பாதுகாப்பை பாதிக்கவில்லை

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

அரச புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் படுகொலைகள் செய்யப் பட்டுவருகின்ற போதிலும்,அது நாட்டின் பாதுகாப்பை எந்த வகையிலும் பாதிக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செயதியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

அணமைக்காலமாக புலானாய்வு உறுப்பினர்கள் படுகொலைசெய்யப் பட்ட சம்பவங்கள் தொடர்பாக பிரதமர் கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.

இதன்படி புலானாய்வு உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு விஷேட திட்டங்கள்

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு வழங்கும் அதிகாரம் அரசு தயாரித்துவிட்டது !

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான சில முனமொழிவுகளை அரசாங்கம் தயாரித்துள்ளதாக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.இடைக் கால நிர்வாகம் வழங்குவதற்கான சில ஆலோசனைகள் அரசிடம் உள்ளது. இது இரண்டு வாரங்களுக்குள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக் கப்படும்.

இவ்வாலோசனைகள் குறித்து விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும இடைக்கால நிர்வாகம் பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப் படும்.என்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இடைக்கா்ல நிர்வாகம் பற்றி கலந்தாலோசிக்க தயாராகவுள்ளதாக விடுதலைப் புலிகள் நோர்வேப்

(10ம் பக்கம் பார்க்க)

# பொங்கு தமிழ் நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

மலைய மக்கள் முன்னணித் தலைவரும் பெருந்தோட்ட உட் கட்டமைப்புத் துறை அமைச்சருமா்ன பெ.சந்திரசேகரன் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே அவர் இன்று யாழ்.வருகிறார்.

பல்கலைக்கழக சமூகத்தின் அழைப்பை ஏற்று வருகை தரும் அமைச்சர் யாழ்.மாவட்டத்தில் உள்ளபொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(இ)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் 202 - 0801 இலக்கமுள்ள ஆட்டோவும் CJ 0381 இலக்கமுள்ள CD 125 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கிருஸ்ணமூர்த்தி (தேவி அச்சக ஒழுங்கை) யாழ்ப்பாணம். போன்:- 2789 (7202)

### தொலைபேசி இணைப்பு

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு கடந்தவாரம் முதல் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், அலுவலகச் செயற்பாடுகள் இலகுவாகவும், துரிதமாகவும் இடம்பெற்று வருகின்றன.

(உ-36)

# மீள் குடியமர்வு கொடுப்பனவை விரைந்து வழங்க அரசாங்க அதிபர் உடனடி நடவடிக்கை

(காரைநகர்)

மீளக் குடியமர்ந்த குடும்பங்களிற்கான ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ், 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுத் தொகை வழங்குவதற்கு வசதியாக உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களிற்கு யாழ். அரச அதிபர் கடிதமூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

மீள் குடியமர்வு நிதி வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்யும், ஐக்கிய நாடுகள் உயரிஸ்தானிகராலயத்தினாலும், வடக்கு - கிழக்கு மாகாண சபையினராலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இச் செயற்பாடுகள் உடனடியாக அமுலுக்கு வருவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

❖ கிராமிய புனரமைப்பு குழுக்களை அமைக்கும் பொழுது ஒவ்வொரு மீள் குடியமர்வுக் கிராமங்களிற்கும் ஒவ்வொரு தனியான கிராமியப் புனரமைப்புக் குழுக்களை உருவாக்குதல் வேண்டும். ஒரு கிராமத்துக்கு ஒன்றிற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவு காணப்படுமாயின் அங்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் ஒவ்வொரு கிராமிய புனரமைப்புக் குழு அமைக்கப்படுதல் வேண்டும். இக்குழுக்களின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

❖ கிராமியப் புனரமைப்புக் குழுவில், கிராம சேவையாளர்கள் இக் குழுவை பிரதேச செயலருடன் ஒன்றிணைக்கும் அலுவலராக மாத்திரமே செயற்படுதல் வேண்டும். குறித்த கிராமத்தின அங்கீகரிக்கப்பட்ட தலைவாகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள என ஆகக்கூடிய ஐந்து பேர்வரை அங்கம் வகிக்க முடியும். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய மட்ட அரச, மாகாண, உத்தியோகத்தர் இக்குழுக்களின் அங்கத்தவர்களாகக் கடமையாற்றுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

❖ கிராமிய புனரமைப்புக் குழுக்களிற்கு பிரதேச செயலகங்களில் தனித்தனிக் கோவைகள் பேணப்பட்டு, புனரமைப்புக் குழுக்களின் அங்கத்தவர்களின் விபரம், அவர்களினால் காலத்திற்குக் காலம் ஒன்றுதிரட்டிய நிதியுதவியை வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டவர்களின் அட்டவணை, அது தொடர்பான ஆவணங்கள் என்பன வேறாக பேணப்படல் வேண்டும்.

இவை ஐக்கியநாடுகள் உயாஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு மாகாண சபையினால அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், அரசாங்க அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரிசீலனை செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

❖ கிராமிய புனரமைப்புக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட குடும்பங்கள் அரசாங்கம் தீர்மானித்த நிபந்தனைக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்களா என்பதனை, கொடுப்பனவுச் சிட்டைகளை செயலகத்திற்குச் சிபாரிசு செய்து அனுப்பும் பொழுது இது தொடர்பான பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பிரதேச செயலர் தாம் இதனை திருப்திப் படுத்துவதாக அத்தாட்சிப் படுத்தல் வேண்டும்.

❖ இக்கொடுப்பனவுகளை மீளக் குடியமர்நத தகுதியுடைய குடும்பங்களிற்கு இவ்வருடம் யூலை மாதத்திற்கு முன்னர் கொடுப்பதற்கு ஏதுவாக இது தொடர்பான தகுதி உடையவர்களின் பெயர்ப் பட்டியல்களை யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

❖ இது தொடர்பாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றுபவர்களிற்கு அவர்கள் செய்யும் கடமையின் அளவு அடிப்படையில் தேவை ஏற்படின் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.

❖ நிரந்தர காணியற்றவர்கள், காணிக்கான நிரந்தர ஆவணங்கள் இல்லாத குடும்பங்கள் விடயத்தில் மாற்று நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைகளை பிரதேச செயலர் களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைகளையிட்டு கிராம சேவையாளர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட வேண்டும். (உ-246)

# பிரிட்டன் சென்ற பிரதமர் ரணில் பிரசித்திபெற்ற இடங்களை தரிசிப்பு

(கொழும்பு)

பிரிட்டனிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த 22 ஆம் திகதி அங்கு சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சரித்திர முக்கியத்தும் வாய்ந்த பல இடங்களையும் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2 ஆவது உலக மகா யுத்தத்தின் போது, யுத்த நடவடிக்கைகளுக்கு பணிப்புரை வழங்கப்படுவதற்கு பிரதமர் வில்டன் சேர்ஜ் உபயோகித்த நிலத்தின்கீழ் அமைக்கப்பட்ட கூடத்திற்கும் பிரதமர் சென்று பார்வையிட்டார்.

இந்த விசேட நடவடிக்கைக் கூடம 1939 ஆம் நிர்மாணிக்கப்பட்டது. 500 இறாத்தல் எடையுள்ள குண்டு வீசப்படும் போதிலும் சேதமடையாத வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது.

சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 8 தலைவர்கள் இந்த யுத்த கால அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கவை.

இதேவேளை, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வில்டன் சேர்ஜ் உபயோகித்த சகல உபகரணங்களும் அங்கு நல்ல நிலையில் பாதுகாப்பாக இருப்பதாக கூறப்படுகிறது.

(உ-10)

# ஆசிய கூட்டுறவுச் சம்பாசனை அமைப்பில் இலங்கை இணைவு

(கொழும்பு)

ஆசியக் கூட்டுறவுச் சம்பாசனை அமைப்பில் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் தாய்லாந்தில் நடைபெற்ற 2வது - அமைச்சு மட்டக் கூட்டத்திலேயே இலங்கைக்கு இந்த அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசியக் கூட்டுறவுச் சம்பாசனை அமைப்பில் குவைத், கசகஸ்தான், ஓமான் ஆகிய நாடுகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தாய்லாந்துப் பிரதமரான தக்ஷின் ஹற்றாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அமைப்பு ஆசிய பொருளாதாரத் துறையின் பிராந்திய சம்மேளனமாக விளங்குகின்ற இந்த அமைப்பில், இணைவதற்கு இலங்கையின் சார்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னாணடோ ஏற்கனவே விண்ணப்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-10)

## கப்பல் தாக்கி அழிப்புக் குறித்து

# க.கா. குழுவின் அறிக்கை இன்னும் ஓரிரு தினங்களில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் எண்ணெய்க் கப்பல் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை ஓரிரு தினங்களில் அரசிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் கையளிக்கப்படவிருப்பதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எக்னீஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், படைத்தரப்பு மற்றும் புலிகளின் தரப்புடனான விசாரணைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன், திருமலை மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து அறிக்கைகள் தலைமையகத்திற்குக் கிடைத்துள்ளன. இறுதி அறிக்கைகளைத் தயாரிக்கும் வேலைகளில் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரிக்வே ரெலவ்சன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், இறுதி அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டவுடன், வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திடமும், அரசிடமும் ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார். (உ-8)

# சகிப்புத்தன்மை குறைந்துள்ளமையே வன்முறைகள் பெருகக் காரணம்

## அகவொளி பணிப்பாளர் கருத்து

(தென்மராட்சி)

சித்திரவதையும் துன்புறுத்தல்களும் இல்லாத ஒரு உலகத்தை நாம் உருவாக்க வேண்டுமாயின் நாம் மனிதத்தை மதிக்கவேண்டும். மனிதனை மனிதன் மதிக்காத காரணத்தால் தான் எம் மத்தியில் சகிப்புத் தன்மை, அன்பு, அரவணைப்புப் போன்றவை இல்லாமற் போய்விட்டன. இந்நிலையில் சித்திரவதையும் கொடுமையும் இல்லாத சமுதாயத்தைப் படைக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு அகவொளி நிறுவனத்தின் பணிப்பாளர் வண.பிதா எஸ்.ஜே. இராஜநாயகம் நேற்றைய தினம் அகவொளி நிறுவனத்தில் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட ''சித்திரவதைக்கு உட்பட்டோருக்கான தினம்" தொடர்பான செயலமர்வில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர் திருமதி ரஞ்சி நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

வண.பிதா எஸ்.ஜே.இராஜநாயகம் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடும்போது,

நாம் எப்போது மனிதத்தை மதிக்கினறோமோ அப்போது தான் எமக்கு விடிவு ஏற்படும். எம் மத்தியில் சகிப்புத்தன்மை குறைந்துள்ளமையால் தான் எதற்கெடுத்தாலும் வன்முறை மூலம் தீர்வுகாண முயல்கிறோம். நீ உன்னை அன்பு செய்வது போல மற்றவர்களையும் அன்பு செய்ய வேண்டும்.

இன்றைய உலகில் போட்டிகள், பொறாமைகள், அநீதிகள் கூடி வருகின்றன. அதன் காரணமாகத்தான் அமெரிக்கா தன்னை உலக பொலிஸகாரன் என்ற நினைப்புடன் உலகத்தை ஆட்டிப்படைக்க முயன்று வருகின்றது. நாம் மற்றவர்களுக்கும் உடலும் உள்ளமும் இக்கின்றது என்பதை நினைப்போமேயானால் சித்திரவதையிலும், துன்புறுத்தல் காரியங்களிலும் ஈடுபட மாட்டோம்.

நாம் சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மனப்பாங்கு, பொறுமை போன்றவற்றினை எமது அணிகலன்களாகக் கொள்ளவேண்டும். எனவே, நாம் வாழ்கின்ற உலகத்தை நீதியும் நேர்மையும் நல்ல மணங்கொண்டதாகவும் ஆக்குகின்ற பாரிய பொறுபபும் கடமையும் எம்மிடமே உள்ளது எனக் குறிப்பிட்டார்.

மேலும் இச் செயலமர்வில் வைத்திய கலாநிதி செல்வி முல்லைப் பரந்தாமன், யாழ். மௌலவி ஏ.ஜீ.இக்பால் ஆகியோரும் கருத்துரையாற்றினர். சித்திரவதைக்குட்பட்டோர் தினம் தொடர்பான செயலமர்வு முதல் முறையாக இவ்வருடம்தான் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-77,4)

# திருடர்கள் பார்வை ஊடகவியலாளர் பக்கம்

(கொழும்பு)

பத்தரமுல்ல ரிச்சாட்டி சொயஸா ஞாபகார்த்த வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள ஊடகவியலாளர் இருவரின் வீடுகளில் அண்மையில் அடுத்தடுத்து திருட்டுப் போயுள்ளது.

கடந்த வெள்ளியன்று விஜயா பத்திரிகையின் மூத்த பத்திரிகையாளர் ஒருவரின் வீட்டிலும் கடந்த செவ்வாய் இரவு டெய்லி நியூஸ் பத்திரிகையின் சிரேஸ்ட பத்திரிகையாளர் வீட்டிலுமே கள்வர் தம் கை வரிசையைக் காட்டியுள்ளனர்.

இத் திருட்டுக்கள் குறித்து ஊடகவியலாளர் நலன்புரிச் சங்கம் தமக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(உ)

# சூழல் அபிவிருத்தி அதிகார சபை மத்திய அலுவலகம் செயலகத்தில்

(தென்மராட்சி)

மத்திய சூழல் அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகம் ஒன்று யாழ். மாவட்ட அரச செயலகத்தில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டு கொழும்பிலுள்ள மத்திய சூழல் அபிவிருத்தி அதிகார சபையின் செயலாளர் நாயகம் மானில் ஜயமான்ன, பணிப் பாளர் விஜயசூரிய, பணிப்பாளர் முத்துக்குடவாச்சி ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக்குழவினர் யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், திட்டப் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோருடன் இது தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

(உ-77)

# அதிர்ஷ்ட சீட்டு குலுக்கல் மூலம் அமெரிக்கா செல்லும் இளைஞர்



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இராசதுரை சுகதாஸ் என்பவர் 2002 ஆம் ஆண்டுக்கான அதிர்ஷ்ட சீட்டுக் குலுக்கல் மூலம் அமெரிக்காவில் உயர் கல்வியுடன் கூடிய தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளார். இவர் எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் இருந்து அமெரிக்கா பயணமாகவுள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திலும உயர் தரக் கல்வியை யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், கணனிக் கல்வியை கொழும்பிலும் கற்று மேலும் உயர் கல்வியை அமெரிக்காவிலும் பெறவுள்ளார். இவருக்கு அண்மையில் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினால் பாராடடு விழா ஒன்றினை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இதில் பல கல்விமான்கள் கலந்துகொண்டு இவரின் கல்வியும் தொழிலும் சிறப்புப் பெற்று எமது இனத்துக்கும் நாட்டுக்கும் பெருமைதேடித் தரவேண்டும் என வாழ்த்தினர்.


மேற்படி இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சிவமகாராஜா இவருக்கு மலர் மாலை அணிந்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (பி)

# இந்தியா-பாகிஸ்தானுக்கிடையிலான அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க அமெரிக்கா உதவும்

## அதிபர் புஷ் உறுதிபடத் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான காஷ்மீர்



பிரச்சினைஉட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண உதவத் தயாராகவிருப்பதாக அமெரிக்கா அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடன் காம்டேவிற்றில் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் இதனைக் கூறியுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தானுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா உதவினாலும் இறுதித் தீர்வை இந்த இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலம்தான் காணவேண்டும் என்று ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கத் தடையாக இருக்கும் தீய சக்திகளை இரு தரப்பினரும் புறக்கணிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதேவேளை, காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலையிட வேண்டுமென்று பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கேட்டுக்கொண்டுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களுடன் பேசும்போதே முஷாரப் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி புஷ் தலையிட்டது போல இந்திய-பாகிஸ்தானிற்கிடையிலான காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் புஷ் தலையிட வேண்டுமென்று பாகிஸ்தான் ஜனாதிபதி கேட்டுள்ளார். (பி-9)





தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 24வது பட்டமளிப்பு விழாவில், முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகின்றார் வேளாண் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தமிழக ஆளுநருமான பி.எஸ்.ராமமோகன் ராவ்.

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்

(நியூயோர்க்)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தடுத்து நிறுத்த வேண்டுமென அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பிற்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிற்குமிடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே புஷ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மேலும் அடுத்த 5 ஆண்டு காலப்பகுதிக்குள் 15 ஆயிரம் கோடி ரூபாவை சமாதான நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானுக்கு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகவும், இத் தொகையின் அரைப்பங்கு பாகிஸ்தானின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (பி-2)



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் முதல் முறையாக பிரிட்டன் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். கடந்த 1844ஆம் ஆண்டிற்குப் பின்னர் ரஷ்ய அதிபர் ஒருவர் லண்டன் செல்வது இதுவே முதல் தடவையாகும். லண்டனில் எலிசபெத் ராணியுடன் பாதுகாவலர்கள் புடைசூழ செல்கிறார் புடின்.

# அமெரிக்க-பிரி. படைகளை எதிர்த்து எண்ணெய்க் குழாய்கள் தீயிடப்படுகின்றது

(பக்தாத்)

ஈராக்கில் கடந்த 4 நாட்களுக்குள் 3 எண்ணெய்குழாய் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்கிழமை வெடிப்பு ஏற்பட்டிருந்த எண்ணெய்குழாய் தொடர்ந்தும் எரிந்து கொண்டிருக்கின்றது.

இத்தீயினைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் பிரிட்டன் படையினருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் ஈராக்கிலுள்ள சதாமின் ஆதரவாளர்களே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாகவும் பக்தாத்திலுள்ள அமெரிக்க நிர்வாகி பால்பிறம்மர் தெரிவித்துள்ளார். (பி-2)

# ஈராக்கை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச நிதியமொன்றை உருவாக்கவேண்டும்

## உதவுநாடுகளும் அமைப்புகளும் கோரிக்கை

(நியூயோர்க்)

ஈராக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நிதியமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென ஐரோப்பாவிலுள்ள உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஈராக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக நிதி நிர்வாகத்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது குறித்து பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வரும் நிலையிலேயே இந்த வேண்டுகோளை மேற்குறித்த நாடுகளும் அமைப்புக்களும் விடுத்துள்ளன.

இதேவேளை, ஈராக்கை மீளக் கட்டியெழுப்பி அதனை அந்த நாட்டவர்களிடமே மீண்டும் ஒப்படைப்பதற்கு ஒற்றுமை உணர்வுடன் சம்பந்தப்பட்ட அனைவரும செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் தலைவர் மார்க் மலோ பிரவுண் கூறியுள்ளார். (பி-2)

# திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி இந்தியா பகிரங்கமாக அறிவித்துள்ளது

(புதுடில்லி)

திபெத்தை சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இதையடுத்து திபெத் புத்தமதத் தலைவரான தலைலாமா இந்தியாவை விட்டு வெளியேற்றப்படமாட்டார் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

கடந்த 24 ஆண்டுகளிற்குப் பின்னர் 6 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 22ஆம் திகதி இந்தியப் பிரதமர் சீனா சென்றிருந்தார்.

இதன்போது முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகிய சமயமே திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியென இந்தியாவினால் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தியாவிலிருக்கும் திபெத் புத்தமதத் தலைவர் தலைலாமா வெளியேற்றப்படுவாரா என எழுந்த கேள்விக்குப் பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் யஸ்வந்சின்கா, தலைலாமாவை வெளியேற்றும் நோக்கம் தமக்கு இல்லை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக சீக்கிமை சீனா ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# பாக்-இந்திய விமானசேவை உடன் பேச்சு நடத்த வருமாறு இந்தியா அழைப்பு

(புதுடில்லி)

விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு உடனடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த பாகிஸ்தான் முன்வரவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, விசா நடைமுறைகள் பாதுகாப்பு விடயங்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையிலான பஸ் சேவைகளை குறைந்தது ஒரு மாதத்திற்குப் பின்போட வேண்டி ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கூறியதையடுத்து,

இரண்டு நாடுகளுக்குமிடையில் கடந்தவருடம் முறுகல்நிலை ஏற்பட்டு 4வது போரொன்று ஏற்படலாம் என்ற அச்சம் நிலவியதன் காரணமாக விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் விமானச் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால் தொழில்நுட்ப மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்பட வேண்டுமென்று இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கூட்டத்தை புதுடில்லியில் நடத்துவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

விமான சேவைகளை ஆரம்பிப்பதில் பாகிஸ்தான் தனது சரியான நிலைப்பாட்டை அறிவிக்காததால் விமானசேவைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (பி-9)

# ஒஸாமாவின் நெருங்கிய சகாக்கள் இத்தாலிய பொலிஸாரால் கைது

(ரோம்)

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படும் 6 நபர்களை இத்தாலிய பொலிஸார் கைதுசெய்திருப்பதாக அந்நாட்டு நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இத்தாலியின் மிலான் நகரில் நேற்று முன்தினம் அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இத்தாலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக 40 வீடுகளில் 170ற்கும் மேற்பட்ட பொலிஸார் தேடுதல் நடத்தியதாக பொலிஸ் அறிக்கைஒன்று கூறுகிறது.

எனினும், ஒரு சந்தேகநபர் தொடர்ந்தும் தலைமறைவாகியிருப்பதாக நீதிமன்ற வட்டாரம் கூறியிருக்கிறது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 5பேர் ரியூனிசியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் மொறோக்கோவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிற்கெதிராகப் பயங்கரவாத நடவடிக்கைகளிற்கு நிதியுதவி வழங்கினார்கள் என்றும் பல்வேறு வகைகளில் உதவி வருகின்றார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்

# பயணிகள் பஸ் ஆற்றில் வீழ்ந்ததில் 40 பேர் மரணம்?

(புதுடில்லி)

இந்தியாவின் மத்திய பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று ஆற்றில் வீழ்ந்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் அதில் பயணம் செய்த 40 பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

மண்சார் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள சிறிய பாலமொன்றை கடக்கும்போதே பஸ் ஆற்றில் விழுந்துள்ளது.

பஸ் ஆற்றில் விழுந்தவுடன் சாரதி உட்பட 10 பேர் கரைக்கு நீந்தி உயிர் தப்பியுள்ளனர்.

பஸ்ஸில் இருந்த ஏனைய 40 பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக இப்பகுதியில் கடும் மழை பெய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)



சீனாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், லுவோயாங்கின் ஹேனன் மாநிலத்தின் ஆளுநரைச் சந்தித்துப் பேசியபோது.

# உறவைத் தேடும் உறவுகள்


வெள்ளி முற்றம்

கூதிர்கால விடியல் நேரம் பனிப் பரப்பின் ஊடாகப் பொன் நிறக் கதிர்களை வீசிக்கொண்டு கதிரவன் புறப்படத் தயாராகினான்.கிழக்கு வானம் செவ்வொளி படர்ந்திருந்தது. பூரணை நிலவு மேற்கு வானிடை இறங்கிக்கொண்டிருந்தது. அமைதி பேணப்படவேண்டு என்ற கருத்தாக 'சாந்தி நிலையம் என மிளிரும் கைதடி முதியோர் இல்லம் என்றும் இல்லாதவாறு அன்று அமளிப் பட்டுக் கொண்டிருந்தது.

இரவோடு இரவாக இடம் பெயர்ந்து உண்ணவோ, உடுக்கவோ, இருக்கவோ வழியின்றி அடிமேல் அடியை வைத்து நடந்து கடந்து சென்று கொண்டிருந்த கூட்டத் தோடு சேர்ந்து றஞ்சினி தாயாருடன் வந்து கொண்டிருந்தாள்.மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகத்தில் தகப்பனைத் துப்பாக்கி வேட்டில் இழந்து நல்லூரில் இரவல் வீட்டில் இருந்து வாழத் துடித்த ஏதிலிகள் றஞ்சினியும் அவளுடைய அன்னை கமலமும்ஆவர். கடைகளுக்கு உணவுப் பண்டம்செய்து கொடுத்துச் சீவியம் நடத்தியவர்கள். புலம்பெயர்ந்ததில் பெரிதும் துன்புற்றனர். கோயில்களிலும சாலை ஓர மரங்களின் கீழும் தங்கலாயினர். பனியால் நனைந்து வெய்யிலில் உலர்ந்து மழையில் குளித்து அகதியாகினர். நிவாரண உதவியில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒரு நாள் விடியல் நேரம் மக்கள் கிலி கொண்டு ஓடினர். மட்டுவிலுக்கை ஆமிவந்திட்டு என்ற கதையும் அம்மன்கோவில் பக்கமாகக் கேட்ட வெடிச்சத்தங்களும் அனைவரையும் ஓடச் செய்தது. கமலமும் றஞ்சினியும் மீசாலை வழியாக ஓடிக் கொண்டிருந்தனர். கிளாலிக்கடற்கரை வரை ஓடினர். படகு தயாராக இருக்குவாங்கோ வன்னியில் சுகமாக வாழலாம் என்ற வார்த்தை கேட்டுப் போகலாமா என்று யோசித்து ஆயத்தமாகினர். இரவு முழுவதும் தென்னஞ் சோலையில் தங்கி இடறுப்பட்டு கியூவில் நின்று கடற்கரை சென்றனர். படகுகள் புறப்பட்ட பாடில்லை பறந்து வந்தது ''செல்'' நல்லாதே செல்லெனச் சொல்லாமல் சொல்லியது. சிதறி ஓடியது மக்கள் கூட்டம்.தறி கெட்டு மிதிபட்டு பெட்டி படுக்கைகளை விட்டோடி அல்லல் படு நிலையில் படகு ஓடாது என்ற அறிவித்தல் அலறியது. கைகோத்து நின்ற கமலமும் மகளும் பிரிந்தனர். தாய் ஒரு திசையும் மகள் மறு திசையுமாக மாறினர் ஓடினர். ஒருவரை ஒருவர்தேடினர். படகில் போயிருப்பரென சிலரும் படகில் செல்பட்டிருக்கும் என்றும் எழுதுமட்டுவாளுக்கு ஓடியிருப்பர் எனவும் பலவாறான கதைகள் கிளம்பின. தாயைக் கைவிட்ட பிள்ளையும் பிள்ளையை காணாத தாயும் தனித்தவர்களாய் தவித்தவர்களாய் நடைப்பிணமாகினர். தேடிக்கண்டு பிடிக்கலாமென ஆறுதல் கூறிய அயலவர்களுடன் நடந்து கொண்டு வரும் போது வலிகாமத்துக்கு மக்களை போகவிடுவதான செய்தி கிடைத்தது.

சிறுவனாக இருக்கும்போது தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்து பட்டதாரியாகிய சங்கர் தாயாருடன் வருகிறான்.தவித்துநின்று தனித்திருந்து அழுது அரட்டும் றஞ்சினியை அறுதல்ப்படுத்தி தாயுடன் அழைத்துச் செலகிறான். வலிகாமம் நோக்கி நகர்ந்து முதியோர் இல்லம் தாண்டி விட்டார்கள். பின்னால் வந்த கூட்டத்தினர் கைதடிச்சந்திக்கு நெருங்கினர். அந்த நெருசலில் மயங்கி



விழுந்த பெண் ஒருவர் தூக்கி வரப்பட்டு முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட நேரமே இல்லம் அமளிப்பட்டதாகும். மயங்கி விழுந்தவரும் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டவருமே றஞ்சினியின் தாய் கமலம் என்பது றஞ்சினிக்கோ வேறு எவருக்குமோ தெரியாது. வலிகாமம் வந்து சேர்ந்த றஞ்சினி விரக்தியுற்ற நிலையில் எவருடனும் ஒட்டுதல் இன்றி வாழ்ந்து வந்தாள். வயது வந்த பெண் ஒருத்தியை வைத்துக் காப்பாற்றுவதென்பது சங்கரின் தாய் செல்லத்துக்கு பெரும் பாடாகப் போய்விட்டது. ஒருவாறு பேணிப் பாதுகாத்து அன்னைக்கு அன்னையாக நின்று தூரத்து உறவு முறையான பையன் ஒருவனுக்கும் றஞ்சினிக்கும் மணம்முடித்து வைத்த பெருமை சங்கரின் தாய்செல்லத்தையே சேரும்.

திருமணம் சுமுகமாக நடந்தேறிய போதிலும் றஞ்சினியின் மனோ நிலை குடும்ப வாழ்வுக்கு ஏற்புடையதாய் அமையவில்லை. மாமி மருமகளுக்கிடையே புரிந்துணர்வு கிடையாது. பொல்லாத தாய்ப்பாசம் றஞ்சினியை நிலை குலையச் செய்திருந்தது. அதற்கு மேலாக கணவனான சிவாவும் தாயாகிய ராசத்திடம் பாசம் கொண்டிருந்தான். இதனால் சில இடர்பாடுகள் ஏற்படுவதும் உண்டு.முடிவில் தமது குடும்பவாழ்வுக்கு மாமியார் இடையூறு தருகிறார் என்றெண்ணத் தலைப்பட்டாள் றஞ்சினி; இதனூடே தாயைத் தேடும் வேலையிலும் முனைப்புக்காட்டி சங்கரை நாடினாள். இது பூகம்பத்தையே வெடிக்கச செய்தது.

அன்றொரு நாள் சங்கர் கதைத்துக்கொண்டிருந்தான். தனக்குப் பாதுகாவலனாக இருந்தவன் என்ற முறையில் சகோதர பாவமாக நடந்த றஞ்சினி கொஞ்சம் கூடுதலாகவே பாசம் காட்டுவதைக்கண்டு பொறுக்க முடியாத மாமியார் நிலைமையை தவறாகக்கருதி கடும் வார்த்தைகளைக் கக்கி விட்டார். ''துலைஞ்சு போனவளைத்தேடுற சாட்டில் பழைய உறவுகளை தூசு தட்ட வந்தாயோ'' என்ற வார்த்தைகேட்டு நிலை குலைந்து மௌமாக வெளியேறினான் சங்கர். மனம் ஒடிந்த றஞ்சினி திகைத்து நின்றாள்.தாய் ஒரு புறம் தாரம் மறுபுறமாக இடையில் சிக்கிய சிவா மத்துளமாகினான். தாயைத்தேடும் முனைப்பில் றஞ்சினியும் தனிமைநாடுவதால் ராசம் எனும் ராசம்மாவும் எதிர் முகமாகினர்.

காலை நேரம் முதியோர்இல்லக் கதவு மெல்லத்திறந்தது. மழைக்கு முக்காடிட்ட உருவம் உள்நுழைந்தது. அலுவலக அம்மணி நேர்நோக்கினார். தொலைபேசி உள்வாங்க வந்த செவிலி அழைத்துச்சென்ற ராசத்தை அறிந்து கொண்ட கமலம் ஓடி வந்து கட்டியணைத்து முத்தமிட்டாள். தனது மகளது மாமியார் என்பது தெரியாமலே தமதூர் உறவு ஒன்றைக்கண்டு விட்டமகிழ்ச்சி கமலத்துக்குண்டானது. எங்கு சென்றிருப்பரோவென்று தெரியாது தாயைத்தேடிக்கொண்டு சிவா அலைந்தான். உறவுகளைத் தேடும் பணியில் ஒன்று பட்டு நின்ற இருவரும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தவரின் கண்ணில் ''தலயாத்திரை செல்கிறேன் தேடவேண்டாம்'' என்றெழுதியகாகிதம் பட்டது. ராசம் கண்ட தலம் முதியோர் இல்லம் என்பதை அறிந்து கொள்ளாத மகன சன்னதி எல்லாம் சுற்றி வந்தான்.

மயங்கி விழுந்து முதியோர் இல்லம் கொண்டுவரப்பட்ட கமலமும் புதிதாக வந்து சேர்ந்த ராசமும் ஒரு ஊரவரான போதிலும் உறவு தெரியாமலே பழகினர். இடப்பெயர்வின் நிகழ்வுகளை பகிரலாயினர். தனது மருமகளின் தாயுடனேயே தான் பழகுவதை அறிந்து கொண்ட ராசம் தன்னைக்காட்டிக்கொள்ளாமலே காலம் தள்ளி வந்தாள்.கமலத்தின் இருக்கையை மருமகளுக்கு தெரிவித்தால் தானும் வெளிப்படவேண்டி வந்து விடுமே என்று ராசம் கலங்கினாள். ஆயினும் உறவுகளின் ஒன்று கூடல் மூலம்நலமுடன் வாழலாமென்ற துணிவில் தேடும் உறவுகள் முதியோர் இல்லத்தில் இருப்பதை மகனுக்குத் தெரியப்படுத்தினாள். மழை மேகம் கண்ட மயில் போல் குதூகலமான தம்பதியர் தாயாதிப உறவுகளை அழைத்து வர ஆயத்தமாகினர்.

''இலக்குத்தவறிய கிபிர் குண்டு வீச்சில் கைதடி முதியோர் இல்லத்தில் இரண்டு பெண்கள் உட்படப் பத்து பொது மக்கள் பலி''பலர் காயம கட்டடங்கள் சேதம் என்று இடியோசையாக வலம்புரி ஊதிய வாசகம் கேட்டு மயங்கித்தெளிந்து இறந்தவா எம்மவராக இருக்க முடியாதெனத் துணிந்து உறவைத் தேடும் உறவுகள தேடலில் ஈடுபடலாயின. இன்னமும் இரவு பகல் தேடிக்கொண்டேயிருக்கின்றனர். காணாமல் போனவர்கள் கண்ணில் பட்டதில்லை. ஏனெனில் அவர்கள் புதைகுழிகளின் சங்கமம அல்லது புதுமனை(சிறை)யின் சொர்க்கமாகி விட்டனர். □

கோவைமணி

---

கொழும்பில் தங்கியுள்ள

# தமிழர்களின் விபரங்களைப் பதியும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது

## கொழும்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தகவல்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழர்களின் விபரங்களை அறிந்து கொள்வதற்கேற்ற வகையில் பதிவு நடைமுறைக்கான விண்ணப்பப் படிவங்கள் எந்த ஒரு பொலிஸ் நிலையங்களிலிருந்தும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. எனினும் எதிர்காலத்தில் தமிழர்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறையை அமுல் படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதெனவும் பொலிஸ் தலைமையகம் இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றதெனவும் கொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே வந்து பொலிஸாரை படுகொலை செய்யும் இவ்வேளையில் பதிவுமுறை மிகவும் தேவையான ஒன்று என்பதை உணர முடிகிறது.

பதிவு முறைகொண்டு வரப்பட்டால் தமிழ்மக்கள் ஏன் பயப்படவேண்டும்?தலை நகருக்குள் வரும தமிழர்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய நிலை எமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன்,இது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகிறோம். இதற்கான முடிவுகள் இவ்வாரம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தலை நகரில் தமிழர்கள் செறிந்து வாழும் கொட்டாஞ்சேனை மட்டக்குளி, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி,தெஹிவளை, கிராண்ட்பாஸ் போன்ற பகுதி களிலுள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகள் இது பற்றிக்கருத்துக் கூறுகையில்,

இவ்வாறான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தியில் உண்மை எதுவும் இல்லை.

ஆனாலும் கொழும்பில் தங்கியுள்ள தமிழர்களின் விபரங்களை பதிய வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். (உ-8)

---

# கிராம மின் விநியோகத்திற்கு உலக வங்கி 12 கோடி உதவி

(கொழும்பு)

வடகிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களிலும் கிராம மின் விநியோகம், வடிகால் அமைப்பு ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு 12 கோடி அமெரிக்க டொலர்களை உலக வங்கி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஒப்பந்தம் அண்மை யில நிதி அமைச்சில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை,39.8 மில்லியன்டொலர்கள் மானியமாக வழங்கப் பட்டதென்றும் 125மில்லி யன் டொலர் கள் கடனாக வழங்கப்பட்ட தென் றும் நிதி அமைச்சு வட்டாரங்கள்தெவித்தன. (உ-10)

---

# அஸ்கிரிய மகாநாயக்கர் ஞாயிறன்று யாழ். வருகிறார்

(கொழும்பு)

கண்டி அஸ்கிரியபீட மகாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்திர கித்த மகாநாயக்க தேரோ நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

சமாதானத்திற்கும் தீர்வுக்குமான சர்வதேச அமைப்பின் அழைப்பினையேற்று யாழ்ப்பாணம் வரும் இவர், சர்வமதப் பிரதிநிதிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளையும் சந்தித்து தற்போதைய சமாதான நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

இவர் நயினை தீவுக்கு செல்வார் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை,ஆயிரத்து 500 பௌத்த துறவிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு ஆன்மீக விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

---

# கல்விச் சீர்திருத்தத்தில் ஆங்கிலத்திற்கு முன்னுரிமை

## கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் சீர் திருத்தங்களில் ஆங்கில மொழி,கணனித் தொழில் நுட்பம் போன்ற பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அயல் நாடான இந்தியாவில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதும் உலக தொழிற்சந்தைக்கு பலதுறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களை வழங்கும் நாடாக அது புகழ்பெற்றிருக்கிறது.

ஆனால் இலங்கையில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 95 சதவீதமாக இருந்தாலும் இது தேசிய அபிவிருத்திக்கு பயன் பட்டுள்ளதா என்பது தான் கேள்விக்குறியாக இருக்கிறது என்றும் இதனால்தான் ஆங்கிலம் தகவல் தொழில் நுட்பம் என்பதை போதிப்பதில் அரசு அதிக கவனம் செலுத்திவருகிறது என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் கூறியுள்ளார்.

(உ-10)

---

# மக்களின் கௌரவமான வாழ்வுக்கு நிரந்தர சமாதானமே வழிவகுக்கும்

## கடற்றொழில் அமைச்சர் கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கல்முனையில் கடற்றொழில் விரிவாக்க அலுவலக புதிய கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவிக்கார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இன, மத, பேதமின்றி அனைத்து மக்களும் கௌரவமானமுறையில் வாழக்கூடிய நிரந்தர சமாதானம் ஒன்று விரைவில் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அதற்கு அனைவரும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும். சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல அரசுக்கு சகலரும்அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, இந்நிகழ்வில் கலந்து கொண்ட கப்பல்துறை மற்றும துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூக் ஹக்கீம் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் தோற்றுவிக்கப்படும் சமாதானம் முஸ்லிம் சமூகத்திற்கும் திருப்தி தரும் சமாதானமாக இருக்கவேண்டும். அவ்வாறில்லையானால் இச் சமாதானம் நிரந்தர சமாதானமாக அமையாது என்றார். (உ-10)

# பொங்குகிறது தமிழ் உணர்ச்சி

# தமிழுக்கில்லை இனி வீழ்ச்சி

## உலகத் தமிழ்மாந்தர் புத்தெழுச்சி

**யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மனித நேய அமைப்புக்களின் ஒருங்கிணைப்பில் இன்று இடம்பெறுகின்ற "பொங்கு தமிழ்" நிகழ்வின்மூலம் தமிழர் தம் ஒற்றுமையை உலகறியச் செய்யுமாறு பல்வேறு தரப்புக்களில் இருந்தும் அறைகூவல்கள் எழுந்துள்ளன.**

### தமிழீழ விடுதலை அணி

"எங்கள் நிலம் எமக்கே" "நாங்கள் எங்கள் வீடுகள் செல்வதற்காக படையினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எழுப்புகின்ற குரல் பொருள் பதிந்தகூற்றாகும்.

ஒரு இனம் எதையும் இழக்கலாம், மீண்டும் வாழ்வைப் பெறலாம். ஆனால், ஒரு இனம் தன் மண்ணை இழந்து விட்டால் அதன் வரலாறு அதனோடு முடிவடைகிறது. மொழி வாழ வேண்டுமாயின் இனம் வாழவேண்டும். இனம் அந்தரத்தில் இருக்கின்ற லோகத்தில் வாழமுடியாது. மொழியின் வாழ்வும் அம்மொழிபேசும் இனத்தின் வாழ்வும் தனது தாயகத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகும்.

ஈழத் தமிழினத்தின் தாயகம், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசினாலும் திட்டமிட்டுப் பறிக்கப்படுகிறது.

நிலம் காத்து நிலையான வாழ்விற்கு வழிவகுக்க "பொங்குதமிழ்" நிகழ்ச்சியாய் பொங்கும்தமிழ் உணர்வோடு அனைத்துத் தமிழ் மக்களும் திரண்டு வந்து ஆதரிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலை அணி பணிவோடு வேண்டுகிறது.

### வடமாகாண அதிபர்கள் சங்கம்

தமிழ் மக்களது உண்மையான உணர்வுகள், அவர்களது நியாயமான தேவைகள் உணரப்பட்டதாகத் தெரியவில்லை. அரசும் உலக நாடுகளும் தமிழ் மக்களது மறுக்கவொண்ணா உரிமைகளையும் அவர்தம் உணர்வுகளையும் மலினப்படுத்தி புறந்தள்ள முனைகின்றன. இத்தருணத்தில் தமிழ் மக்கள் விழித்தெழுந்து தொழிற்பட்டால் மாத்திரமே தமது கௌரவமான இருப்பை உறுதி செய்துகொள்ள முடியும். எமது இலக்கு அடையப்படும் வரை நமது உணர்வுகளை வெளிக்காட்டுதல் தமிழ் மக்கள் அனைவரதும் கடமையாகும். எமது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு எட்டப்படும் வரை எமது குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும்.

தேக்கநிலை அடைந்துள்ள இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் உரிய முறையில், உரிய திசையில் முன்னெடுக்கப்படுவதற்கான அடிப்படையாக அமையவேண்டியது வடக்கு - கிழக்கில் மக்களது இயல்பு நிலையை தோற்றுவிப்பதாகும். தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் தத்தமது சொந்த இடங்களில் குடியமரச் செய்தல், அதே போன்று பாடசாலைகள், ஆலயங்கள் முதலியவற்றில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுதல் என்பன உடனடித் தேவையாக நிறை வேற்றப்படல் வேண்டும். அப்போது தான் அர்த்தமுள்ள வகையில் பேச்சுவார்த்தையினை தொடர வாய்ப்பேற்படும். இதனை வலியுறுத்தி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மக்கள் அமைப்புக்களால் மேற்கொள்ளப்படவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்று யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் உரிமைக்கும் சமாதானத்திற்குமாகத் தங்கள் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்வதன் மூலம உலக நாடுகளுக்கு ஓர் தெளிவினை உண்டுபண்ணுதல் வேண்டும் என வடமாகாண அதிபர்கள் சங்கம் அனைத்து மக்களையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றது.

### அ.விநாயகமூர்த்தி எம்.பி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இன்று நடத்தப்படும் பொங்குதமிழ் நிகழ்விற்கு எனதும், எனது கட்சியினதும் வாழ்த்துக்களையும் ஆதரவினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ் இனம் ஏகோபித்து விடுதலைப் புலிகளின் பின்னால் தான் திரண்டு நிற்கிறது. என்பதை இந்நிகழ்ச்சி மீண்டும் ஒருமுறை உலக சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டும என நம்புகிறேன்.

### மாவை சேனாதிராசா எம்.பி.

இதனால், சர்வதேச சமூகத்தின் தலையீடுகளும், நோர்வே முதலான நாடுகளின் அனுசரணையும் அரசையும் - தமிழீழ விடுதலைப் புலிகளையும் போரை நிறுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவைத்தன.ஆனால், 16 மாதங்கள் கடந்தும் குறிப்பாகத் தமிழ்த் தேசத்தில் மக்களின் இயல்புவாழ்க்கை திரும்பவில்லை. பதிலாக அரசின் இராணுவம், குறிப்பாக யாழ். குடாநாட்டில் 30வீதமான குடியிருப்பு, விவசாய மற்றும் கடலோரப் பிரதே சங்களை அதியுயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப் படுத்தி லட்சக்கணக்கான மக்களின் மீள் குடியேற்றத்தை தடுத்துநிறுத்தி வருவது மட்டுமல்லாமல், புதிய இராணுவ முகாம்களையும் நிறுவிவருவதுடன், ஆத்திரமூட்டக்கூடிய போரை வலிந்து திணிக்கிற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

இவற்றிற்கெதிரான ஜனநாயக நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். இதனால மக்களின் அன்றாட வாழ்க்கை - வேளாண்மை, மீன்பிடி, கல்வி முதலான அனைத்துத்துறைகளும் பாதிப்படைந்து வருகிறது. சர்வதேச சமூகம் அழிந்துபோன தமிழ் தேசத்தை மீளக் கட்டியெழுப்ப ஒதுக்கிய நிதியைக் கூட கையாள்வதற்கு அரசியல் நிர்வாக அதிகாரமுள்ள கட்டமைப்பை ஏற்படுத்தவும் அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது. எம் மக்களிடையேயும் வெறுப்பும் விரக்தியும் ஏற்படுகின்றது.

இந்நிலையில்தான் பல்கலைக்கழக சமூகம் 2001 ஜனவரியில் பொங்குதமிழ் எழுச்சிமூலம் ஏற்படுத்திய விழிப்புணர்வை இப்பொழுதும் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை உணர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்த் தேசத்து மக்கள் தம் ஆட்சி உரிமைக்காகவும் இராணுவ அடக்கு முறைக்கு எதிராகவும் ஜனநாயக வழிகளில் குரல் எழுப்ப வேண்டியதும், இயங்கவேண்டியதும் அவசியம் என எண்ணுகிறோம். பேரினவாதம் ஒன்றுபட்டு நிற்கின்ற போது தமிழ்த் தேசம் பிளவுபட்டு நிற்க முடியாது.

பல்கலைக்கழக சமூகம் குறிப்பாக மாணவர் சமுதாயத் தமிழ்த் தேசிய இன எழுச்சியை ஏற்படுத்திடவும் தமிழ்த் தேசத்தின் விடுதலை நெருப்பை அணையாமற்காக்கவும் அர்ப்பணித்து உழைக்கின்ற பொழுது நாம் அனைவரும் அவர்களுடன் கைகோர்த்து எழுந்து நிற்போம் வாருங்கள்.

### காணாமல்போனோர் பெற்றோர் குடும்பத்தினருக்கான அமைப்பு

ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களின் கன்னித் தமிழின் அறிவுப் பெட்டகம் யாழ். பல்கலைக்கழகம்தான் என்பதை எவரும் மறுக்க முடியாத நிலையில், யாழ். பல்கலைக்கழகம் பொங்குதமிழ் நிகழ்வை வடகிழக்குக்கு மாத்திரம் மட்டுப் படுத்தக்கூடாது.

1931 ஆம் ஆண்டு சனத்தொகையில் இலங்கையின் சனத் தொகைக் கணிப்பீட்டின்படி 40 லட்சத்தைத் தாண்டியிருக்கவேண்டிய மலையக தமிழர்கள், இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் கூட 16.5 லட்சமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில், தமிழை உயிரென மதிக்கும் மலையக மக்களின் தமிழ் வளர்ச்சிக்கு இந்தப் பல்கலைக்கழகச் சமூகம் பெரும்பங்காற்ற வேண்டும். பாராளுமன்ற ஜனநாயகத்தின் போலித் தன்மையினால் அந்த மக்களுடைய கன்னித் தமிழ் இன்று அரச மட்டத்தில் கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளதை யாழ். பல்கலைக்கழக சமூகம் உற்றுநோக்கி அதற்கு பரிகாரம் காண முன்வரவேண்டும்.

அதேபோன்று, தென்மாகாணத்தில் ஏறக்குறைய 68 ஆயிரம் தமிழர்கள் தமிழ் தெரியாத தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவல நிலையை யாழ். பல்கலைக் கழகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் தீர்வுகாணும் ஒரு நிகழ்வாக இந்தப் பொங்குதமிழ் எழுச்சி விழா பரிணமிக்கவேண்டும்.

இதற்கான ஒரு தீர்வாக மலையக. தமிழ் மக்களுக்காக ஓர் இணைந்த பல்கலைக்கழகம் உருவாக யாழ். பல்கலைக் கழகம் ஆவன செய்ய முன்வரவேண்டும்.

ஏனெனில், இந்த உலகினில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இருப்பினும் எந்த அளவிற்கு தமிழ் மொழியினூடாக வாழ்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. உலகெங்கும் வாழும் தமிழினத்தின் மாண்புக்கு பெருமை சேர்க்கும் யாழ். பல்கலைக்கழகமும், பல்கலைக் கழக சமூகமும் இருப்பதனால் இதற்கெல்லாம் ஒரு விடிவு காண இந்தப் பொங்குதமிழ் எழுச்சிவிழா பொருத்தமாக அமைகின்ற இவ்வேளை சகல வழிகளிலும் வெற்றிபெற வேண்டும் என்று நாம் வாழ்த்துகிறோம்.

### சிகை ஒப்பனையாளர் சங்கம்

"எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதை உலகிற்கு உரத்திச் சொல்லிவிடுவோம. எம்மவர்களின் வாழ்விடங்களில் ஆக்கிரமித்து நிற்கும் படையினரை தத்தமது வீடுகளுக்குச் செல்லவைப்போம்." ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும இடையேயான அரசியல அதிகார சிக்கல்கள் இடையே தமிழர்களின் சகவாழ்வு கேள்விக் குறியாகியுள்ளது. படையினரின் யுத்தநிறுத்த மீறல்களையும் எம்மவர்களின் வாழ்விடங்களையும் ஆக்கிரமிக்கும் போக்கையும் புரிந்துணர்வு நிலையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்த பொங்குதமிழ் உணர்வுகளாக்கி இன்று மாலை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடி உரத்து அறைய எமது உறுப்பினர்கள் அனைவரும் அன்றைய தினம் அனைத்து நிலையங்களைக் கதவடைப்புச் செய்து வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்!

### யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சமாசம்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப்படாததால், தற்போது பேச்சுவார்த்தை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானது பொது மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை ஏற்படுத்துவது.

ஆனால், பதினாறு மாதங்கள் கடந்த பின்பும் அவை பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. மேலும் அதிபாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்ட யாழ். குடாநாட்டின் மூன்றில ஒரு பகுதி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் அவ்விடங்களில் 20 வருடங்களுக்கு முன் தமது சொந்த இடங்களில் வசித்தவர்கள் தற்போது அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். மக்களின் மீள் குடியமர்விற்கு சர்வதேச ஆதரவைக் கோரி இன்று நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்வில் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக சங்கங்களையும் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும் அன்றைய தினம் வர்த்தக நிலையங்களை முழுமையாகப் பூட்டி, ஒன்றுதிரண்டு பொங்குதமிழ் நிகழ்வில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

### கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

தாயகம் தேசியம் தன்னாட்சி உரிமை என்ற வரலாற்று பூர்வமான விருப்புக்களை வலியுறுத்தியவாறு ஈழத்தமிழினத்தின் உயிராயுதக் குழுக்களான தமிழீழ விடுதலைப் புலிகளை ஈழத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகப் பிரகடனப்படுத்திய "பொங்குதமிழ்" ஈழத் தமிழர்களிடையே களத்திலும் புலத்திலும் ஒட்டுமொத்த விழிப்புணர்வை எழச்செய்து புலம்பெயர் தேசங்களிலும் எழுச்சிகண்டு சர்வதேச வியாபகத்தை ஈட்டியமை அண்மைய வரலாறு.

உலகம் வியக்கும் உன்னத விடுதலைப் போராட்டத்தைப் பல்வேறு தளங்களினூடாகச் சிறப்பாக முன்னெடுத்த தமிழ்த் தேசத்தின் தார்மீக வலுவான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அண்மைக்கால சமாதானத்துக்கான அமைதியை அவமதிக்கும் வகையிலும் தமிழர் தரப்பின் பொறுமையைச் சீண்டும் வகையிலும் சிங்கள தேசத்தின் செயற்பாடு வீரியம் கொண்டுள்ள இவ்வேளையில் "பொங்குதமிழ்" மீள் எழுச்சிகொள்வது காலத்தின் தேவையென்பதை மறுத்துரைக்கப்படமுடியாது.

மிகப்பெரிய முன்னெடுப்புக்களுடனும் பரப்புரைகளுடனும் தேசம் தழுவிய மக்கள் எழுச்சியாக "பொங்குதமிழை" ஏற்பாடு செய்துள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துக்கு முன்னைய காலங்களில் "பொங்குதமிழ் எழுச்சியை" சமகாலத்தில் முன்னெடுத்தவர்களாகிய கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது உணர்வுபூர்வமான எழுச்சிகரமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறது.

அரையாண்டுத் தேர்வுகள் எமை நெருங்கிப் பிடித்திருப்பதனால் நேரடியாக எழுச்சியில் கலந்து கொள்ளமுடியாமல் உள்ளத்தை வருடகின்றது. தேர்வு மண்டபங்களில் நாம் இருந்தாலும் எமது உள்ளங்கள் "பொங்குதமிழ் எழுச்சி" உடனேயே இருக்கும். "பொங்குதமிழ்" தாயக விடுதலையின் தார்மீக குரலாக ஓங்கி ஒலிக்கட்டும்.

## பொங்குதமிழில் பங்கேற்போர் பாதுகாப்பு குறித்து பாதுகாப்பு உயர்பீடத்துக்கு அமைச்சர் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகத்தினரால் இன்று வெள்ளிக் கிழமை முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்வோருக்கு பாதுகாப்பு படையினராலும் பொலிசாரினாலும் எவ்வித கெடுபிடிகளும் ஏற்படாதவாறு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரனால் தனித் தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள அவசர கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

பொங்குதமிழ் நிகழ்ச்சியானது தமிழ் மக்களின் ஜனநாயக, சாத்வீக, சமாதான ஒன்றுகூடலாகும். தமிழ் மக்களின் உரிமைபற்றி அரசின் கவனத்தை ஈர்ப்பதே இப்பொங்கு தமிழ் நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இப் பொங்குதமிழ் நிகழ்ச்சியை யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஒழுங்கு செய்துள்ளார்கள் என்பது தாங்கள் அறிந்தவிடயம்.

இதற்கு பொதுமக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பு இருப்பதனால் இயற்கையாகவே பெரியதோர் உணர்வு அலை தமிழ் மக்களிடையே காணப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் அமைதியாக நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்ச்சி போன்று இம்முறையும் இடம்பெறுகின்றது. குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து பொருந தொகையான மக்கள் இதில் கலந்து கொள்வார்கள். இந்நிகழ்ச்சிக்கு வருகைதரும் மக்களுகக்கு இராணுவ, பொலிஸ் தரப்பினரால் எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவாறு பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(உ)

### பொங்குதமிழுக்கு அழைப்பு

இன்று நடைபெறவுள்ள பொங்கு தமழ் நிகழ்வில் யாழ். மாநகர சபையின் அனைத்துப் பணியாளர்களையும் பங்கேற்குமாறு யாழ். மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் கேட்டுள்ளது. (உ)

### நடமாடும் சேவைமூலம் கடன்

சுயதொழிலில் ஈடுபட்டுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு இவ்வாறான சுய தொழில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் வங்கியின் நடமாடும் சேவைமூலம் கடன் வழங்குவது இலங்கையிலே இதுவே முதன்முறை என ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் முகாமையாளர் கூறியுள்ளார்.

(உ-246)

## இன்று ஒரு தகவல்

# பாவத்தில் பங்கு

நீண்ட காலத்திற்கு முன்னர் ரத்தினாக்கர் என்றொரு ஆள் இருந்தான். நல்ல குடும்பத்தில் பிறந்தவன்தான். இருந்தாலும் சகவாசம் சரியில்லை. வேடர்கள் சில பேருடன் சேர்ந்து அடிக்கடி எங்கேயாவது சென்று கொள்ளை அடிப்பான். அதுவே அவனுக்கு எப்பவும் தொழிலாய் போனது.

ஒரு சமயம் சப்தரிஷிகள் அவன் இருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் இவனுக்கு உள்ளங்கையை அரிக்கத் தொடங்கியது. சும்மா இருக்க முடியவில்லை. அவர்கள் அசந்து போயிருந்த சமயம் பார்த்து ஏதாவது எடுக்கலாமென்று அணுகினான். ஆனால் அவர்கள் இதைப் புரிந்து கொண்டார்கள். எங்களிடம் எந்தப் பொருளும் இல்லையே, எதைக் கொள்ளையடிக்கப் போறாய் என்று கேட்டார்கள். 'திரு திரு' என முழித்தான். அதுசரி ஏன் இந்தப் பாவத்தைச் செய்கிறாய் என்று கேட்டார்கள். குடும்பத்தைக் காப்பாத்திறதுக்கு இந்தப் பாவத்தைச் செய்கிறேன். அதிலே ஐஞ்சில் ஒன்று தானே எனக்கு வரும் என்று சொன்னான். அது எப்படி ஐஞ்சில் ஒன்று என்று சொல்கிறாய் என்று சப்தரிஷிகள் கேட்டனர்.

எனது குடும்பத்திலே என்னோட சேர்த்து ஐஞ்சு பேர். அந்த ஐஞ்சு பேருக்கும் பாவம் போகும் தானே என்றான். அப்படி என்றால் நாங்கள் இங்கு இருக்கிறோம் நீ வீட்டிற்கு போய் உங்கள் குடும்பத்திலே உள்ளவர்களை பார்த்து நான் செய்கிற பாவத்திலே நீங்களும் பங்கு போட்டுக் கொள்கிறீர்களா? என்று கேட்டுவிட்டு வா என்றார்கள்.

ரத்தினாக்கர் சரி என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு போனான். முதலிலே தகப்பனாரைப் பார்த்து நான் கொள்ளை அடித்து வாற பொருளிலே பங்கு எடுக்கிறீர்களே பாவத்திலேயும் உங்களுக்கு பங்கு உண்டு தானே என்றான். அதற்கு தந்தை என்னைக் காப்பாற்ற வேண்டியது உனது பொறுப்பு. அதனாலே பாவத்திலே பங்கு கிடையாது என்றார். பின்பு தாயாரிடம் சென்றான். இதே கேள்வியை கேட்டான். அவளும் அப்பா சொன்ன மாதிரியே சொன்னாள். அதன் பின் மனைவியிடம் சென்றான் அங்கும் இதே கேள்வியைக் கேட்டான். அதே பதிலை மனைவியும் சொன்னாள்.

எல்லோரும் தங்களைக் காப்பாத்த வேண்டியது உன் பொறுப்பு என்றும் பாவத்திலே பங்கு போட முடியாது என்றும் சொன்னார்கள்.

ரத்தினாக்கர் யோசித்துப் பார்த்தான். அவனுக்கு ரொம்பப் பயமாகப் போய்விட்டது. இதுவரை நிறையப் பாவம் செய்து விட்டேன் என்று சப்தரிஷிகளிடம் ஓடிப் போய், அவர்களின் காலிலே விழுந்து நீங்கள் தான் என்னைக் காப்பாத்தனும் என்றான். அவர்கள் அவனுக்கு இராம நாமத்தை உபதேசம் செய்தார்கள். அதனை ஜெபிக்கும்படியும் சொன்னார்கள்.

மெய்மறந்து மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருந்தான். கறையான்கள் அவனை மூடி புற்று எடுத்து விட்டன.

அவர்தான் இராமாயணத்தை எழுதிய வால் மீகி. அவர் தான் ரத்தினாக்கர் ஆவார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

### கிளி. பாடசாலை மாணவர்களுக்கான

# பாடப்புத்தக விநியோகம் பூரணப்படுத்தப்படவில்லை

(கிளிநொச்சி)

பாடசாலைகளில் இரண்டாம் தவணை ஆரம்பமாகிவிட்ட நிலையிலும் கூட 33 வீதமான பாடப்புத்தகங்கள் இன்னமும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவசாமி இதுபற்றி கூறுகையில்:

இரண்டாம் தவணை ஆரம்பமாகியும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு 33 வதமான பாடப் புத்தகங்கள் வந்து சேரவில்லை. கிளிநொச்சி கரைச்சிக் கோட்டத்திற்கு மட்டும் 76 ஆயிரத்து 589 இலவச பாடப் புத்தகங்கள் வரவேண்டும். ஆனால் அவற்றில் 59 ஆயிரத்து 20 பாடப் புத்தகங்கள் மட்டுமே வந்து சேர்ந்துள்ளன. அத்துடன், 5ஆம் ஆண்டு மாணவர்களுக்கான ஆங்கிலப் பாட நூல்களும் வந்து சேரவில்லை என்றார்.

மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் தமது பதவிகளை பொறுப்பேற்ற நிலையிலும், இவ்விரு மாவட்டங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுவதாகவும் கல்விப் பகுதி வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (உ-8)

# ஒரு கை துண்டாடப்பட்டவர் உடத்தலவின்ன வழக்கில் சாட்சியம்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மேல் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முகம்மத் சஜித் என்பவர் தனது ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் சாட்சியமளித்தார்.

வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் வண்டியை பின்தொடர்ந்து வெள்ளை நிற வான் ஒன்றில் நாம் பயணம் செய்தோம். கண்டியை நோக்கி சென்று கொண்டிருந்த நாம் பொல்கொல்ல வாக்குச் சாவடியை நெருங்கும்போது டிபென்டர் வாகனம் ஒன்று எம்மை பின் தொடர்ந்து வந்தது. எமது வான் மின கம்பத்தில் மோதியது. டிபென்டர் வாகனத்தில் இருந்தவர்கள் இறங்கி எம்மை நோக்கி சுடத் தொடங்கினர்.

வானுக்குள் இருந்த மிர்சான் என்பவர், இவர்கள் ரத்வத்தையின் ஆட்கள் என்று என்னிடம் தெரிவித்தார். இவ்வாறு முகம்மத்சஜித் தனது சாட்சியத்தில் கூறினார்.

இவ் வழக்கில் ஏற்கனவே சாட்சியமளித்த அனுராபண்டார என்பவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அவரே நீதிபதியிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து, இது குறித்து பூரண விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிபதிகள் ரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்டனர்.

இத்தகைய இழி செயல்கள் மேலும் மேலும் தொடரக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக நீதிபதி எரிக்பஸநாயக்க நீதிமன்றில் தெரிவித்தார். விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (பி)

# சமாதானம், அபிவிருத்தி இரண்டையும் ஏற்கும் வலு இலங்கைக்கு உண்டு

## பிரதமரைச் சந்தித்த பிரி. அமைச்சர் கருத்து

(கொழும்பு)

சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்கக்கூடிய வலுவை இலங்கை கொண்டிருப்பதாகவே சர்வதேச சமூகம் கருதுவதாக பிரிட்டன் நாட்டின் சர்வதேச அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் திருமதி. ஆமோன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரிட்டனில் உள்ள தனது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய போதே ஆமோன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்:

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு இதனை நிரூபித்திருக்கிறது என்றார்.

அதே சமயம், ஆமோனை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க விடுத்த அழைப்பையும் அவர் ஏற்றுக்கொண்டதுடன்,

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்கு வருவதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டநிதி உதவியை உரிய முறையில் பயன்படுத்துவது குறித்த வழிவகைகள் பற்றி அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், வெளிநாட்டு அலுவலகள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் இச் சந்தர்ப்பத்தில் விளக்கிக் கூறினர். (உ-10)

## இராசி பலன்

**27. 06. 2003**

**(ஆனி 13, வெள்ளி)**

| | |
|---|---|
| திரயோதசி | மு.இ. 7.46 வரை |
| கார்த்திகை | மு.ப. 6.55 வரை |
| இராகுகாலம் | 10.25-11.55 |
| சுபநேரம் | 5.55 -7.25 |

பிரதோச விரதம்

**மேடம்**
மாதர் நட்பு, மதிப்புக்குறைவு,முயற்சி பலிதம்,நல்ல முயற்சி.

**இடபம்**
நல்ல சிந்தனை,தெய்வ தரிசனம்,எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
பிதா சிந்தை,பணவிரயம், மனஸ்தாபம், முயற்சி தாமதம்.

**கடகம்**
தெய்வ தரிசனம் ,நண்பர்கள் சந்திப்பு பெருமையான சம்பவம், தொழில் இலாபம் அதிகரிக்கும்.

**சிங்கம்**
உற்சாகமான நிலை, சுபநிகழ்ச்சி, காரியம் கைகூடும், அதிகார நிலை.

**கன்னி**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், வயிற்றுக்கோளாறு, அச்சமான நிலை, உடல் உழைப்பு.

**துலாம்**
வீண் தொல்லை,பிறருக்கு உதவுதல், அமைதிக்குறைவு, காரியதாமதம்.

**விருச்சிகம்**
திடீர்பயணம்,குடும்ப சுகம், விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**தனுசு**
சத்துரு ஜெயம், புதிய முயற்சி,தெய்வ சிந்தை, உடல் நலம்.

**மகரம்**
தாழ்ந்த சுபாவம்,காரிய இடையூறு, சொத்துக்களால் மனஸ்தாபம்,அதிகாரம்.

**கும்பம்**
மாணவர்கல்வியில் ஆர்வம்.பயந்த சுபாவம், விரும்பாத உறவு, காரியதாமதம்.

**மீனம்**
கூட்டு முயற்சி இனிய அனுபவம், தனவரவு, அந்நியர் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இழந்த அ. அட்டைகளை பெறுவதற்கு வழிவகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போர் அனர்த்தம் காரணமாக தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கும், இதுவரை தேசிய அடையாள அட்டைகளைப் பெறாதவர்களுக்கும் அவற்றை வழங்கும் பொருட்டு நடமாடும் சேவை இம் மாத இறுதியில் ஆரம்பமாக உள்ளது.

அனைத்துப் பிரதேச செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

எனவே, இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெறாதவர்கள், அடையாள அட்டை பெறுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களுடனும் தத்தமது கிராம அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பப் படிவங்களைப் பெறுமாறு ஆட்பதிவுத் திணைக்களம் கேட்டுள்ளது. (உ-10)

# உள்ளூராட்சி வார செயற்பாட்டுக்கு தலா 15ஆயிரம்

## சகல உள்ளூராட்சி மன்றங்களும் பெறலாம்

(சுதுமலை)

வடக்கு - கிழக்கு மாகாணப் பகுதிகளில் உள்ளூராட்சி வாரச் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு வசதியாக, 72 உள்ளூராட்சி மன்றங்களிற்கும் தலா 15 ஆயிரம் ரூபா தொகை வழங்கப்படவுள்ளது.

மேலும், உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சிறந்த பயனுள்ள முறையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து தெளிவான விபர அறிக்கைகள், செயற்திட்ட அறிக்கைகளை ஒழுங்கமைத்து விரைவில் அனுப்பி வைத்தால் விரைவாக கொடுப்பனவுகளை வழங்க முடியும் எனவும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார். (உ-83,252)

# ஒளியைத்தேடி இருட்டில்வாடும் இலங்கை அகதிக்குழந்தைகள்

(கொழும்பு)

இந்தியா பெங்களூர் அருகே 300 இலங்கை அகதிக் குழந்தைகள் தொடர்ந்தும் பஞ்சம், பசி, பட்டினியால் வாடி வருவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் இந்த இலங்கை அகதிக் குழந்தைகளுக்கு தொண்டர் நிறுவனமொன்று தங்கும் வசதிகளுடன் கூடிய பாடசாலை ஒன்றினை 1992இல் அமைத்துக் கொடுத்து உதவிசெய்தது.

இதில் 5 வயதிலிருந்து 21 வயது வரையான பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் போர் அனர்த்தங்களினால் அநாதைகளாக இருப்பதுடன், மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்க்கை நடத்தி வருபவர்களுமாவர்.

இவர்களுக்கு 2 வருடங்கள் உதவி செய்து வந்த கர்நாடக அரசு பின்பு இவர்கள் விடயத்தில் எந்தவித அக்கறையும் எடுக்காமல் இருந்து வந்ததை அடுத்து, தொண்டர் நிறுவனங்கள் அந்த அரசிடம் போராடியும் அரசிடமிருந்து பலனில்லாமல் போகவே, அந்த பிள்ளைகள் எந்தவித வசதிகளும் அற்ற ஆதரவற்ற நிலையில் இருந்து வருகின்றனர்.

எந்தவொரு வசதியும் இல்லாத நிலையில் உள்ள அவர்களை அரசும் கவனிப்பதாக இல்லை. இந் நிலையில் அவர்களுக்கான மின்சார விநியோகத்தையும் அரசு துண்டித்துள்ளது. இதனால், அங்குள்ள குழந்தைகள் எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல் இருளில் மூழ்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாதம் ஒன்றிற்கு குறைந்தது 3இலட்சம் ரூபா தேவைப்படும் என கணிப்பிடப்பட்டுள்ளது. (உ-15)

# அத்வைத சிந்தனையில் ஒரு துளி



தன்துன்ப அனுபவத்துக்குத் தானே கருத்தா என்பதைப் பலவேறு முகமாக விசாரஞ் செய்து வாழ்பவர்கள் தம் வாழ்க்கையால் ஊர்ந்து செல்லும் எறும்புக்கும் உறுகண் விளையாமல் நடந்துகொள்வார்கள். தம்மால் மற்றொரு உயிர்க்கு உறுகண் விளையுமானால், தாம் அனுபவிக்கும் துன்ப அனுபவத்தை மேலும் கூட்டுவதாயிருக்கும் என்பதைத் தெட்டத்தெளிய அறிவார்கள். இப்படிப் பட்டவர்களின் வாழ்க்கை தெய்வத்தன்மை பொருந்தியதாய் இருக்கும். அவர்களை மனிதத் தெய்வம் என்றே உலகம் போற்றும். அப்படிப்பட்ட மனிதத் தெய்வத்தைப் பகிரங்க உலகிற் காண்பது அரிதினும் அரிது. ஆயினும், இந்த நூற்றாண்டில் ஒருமனிதத் தெய்வத்தைக் காணக்கூடியதாயிருந்தது.இனி வரும் சந்ததியினருக்கு அறிவித்து வைக்கும் முகமாக, அந்தமனிதத்தெய்வத்தின் வாழ்க்கையின் ஒருசிறு பகுதியையாயினும் தெரிவித்துவைக்க ஆசை உண்டாகின்றது. அவருக்குச் சனங்கள் வழங்கிய பெயர், தரும ஏசண்டர். அவரது இயற்பெயர் பிறீமன்;விறீமன் என்று சொல்வதுண்டு; உயர்ந்த இராசகுடும்பத்தைச்சேர்ந்த வெள்ளையர் அவர்.

1910ஐ அடுத்து கவர்மெண்ட் ஏசண்டராய், யாழ்ப்பாணம் கச்சேரியில்வசித்தவர் பிறீமன. அவிடம்''பைசிக் கிள்"ஒன்றே ஒன்று உண்டு; அதில் எங்கும் மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருப்பார்.தம் அதிகாரத்துக்குட்பட்ட கிராமங்கள், மூலைமுடுக்குகள் அனைத்தும் அவருக்குத் தெரியும்.அப்பம் விற்றுப்பிழைப்பவர், கடலை விற்றுப் பிழைப்பவர், ஒன்றுக்கும் வழியில்லாதவர் அனைவரையும் அவர் அறிவார். அவர் அவர்களோடு தங்கி, அவர்கள் உணவிற் பங்கு கொண்டு, அவர்களுக்கு வேண்டியது செய்து வைப்பார். அவர் மெல்லச் சயிக்கிளிற் போகும் போது சனங்கள் தெருவோரங்களில் நின்று தரிசித்து வணங்குவார்கள். 1910ல் நான் படிக்கும் போது அந்தத் தெய்வ மனிதரைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

யாழ். கச்சேரியில் அவரிருக்கும் மேசையில் சிறு குளவியொன்று கூடு கட்டிவிட்டது. அதனைக்கண்ட பிறீமன்துரை, கூட்டுகிறவர்கள் அங்கே பணிசெய்பவர்கள் அனைவரையும் அழைத்து, அந்தக் குளவிக் கூட்டைக் காட்டி, அது குஞ்சு வைத்துக் கலையும் வரை அக்கூட்டை ஒருவரும் கலைக்கக்கூடாதென்று பணித்தார்.

ஒருநாள் செம்மணி வழியாய் அவர் பயணஞ்செய்த போது, நெற்பயிகள் வாடிக்கருகுவதைக் கண்டார்; சகிக்க முடியவில்லை. நடட நடு மத்தியானம்; நெருப்பு வெய்யில் பைசிக்களைஓரிடத்தில் வைத்தார். தொப்பி சப்பாத்து இரண்டையும் கழற்றினார். வயல் ஒன்றின் மத்தியில், முழந்தாளில் நின்று ஆண்டவனை வேண்டினார்; வியர்வை பெருகி வழிந்தது; அவர் அசையவில்லை. கண்களில் நீர்பெருகியது. எங்கோ இருந்து முகில் ஒன்று எழுந்து, கறுத்தது; மழை பொழிந்தது. தரும ஏசண்டுத்துரை தலை முழுகிச் சட்டையிலிருந்து நீர் பொழியத்தெருவுக்கு வந்தார். அந்த தெய்வமனிதர் 'பெய்யெனப்' பெய்தது, மழை.

## வெள்ளி நற்சிந்தனை

ஒருநாள் இரவில் விளக்கின்றி வந்த ஒருவண்டிக்காரன், கல்வியங்காட்டான்.வண்டிவந்தபோது வண்டியைக் குனிந்து பார்த்து வண்டி இலக்கத்தைப் பார்க்க முயன்றார் ஏசண்டுத் துரை.அப்போது மாட்டோட்டுந்தடியால் துரையின் முதுகில் மொத்து மொத்தென்று மொத்திவிட்டான். துரை ஒதுங்கி விட்டார்.அவன் வீடுசென்ற பின் அவன் வீட்டைக் கண்டுபிடிக்க அடையாளம் செய்து விட்டு,மறுநாள் பொலிசை அனுப்பினார். அவன் ஏசண்டு என்று அறிந்ததும்,நடுங்கிக் கொண்டு அவர்முன் சென்றான். துரை அவனை நோக்கி ''நல்லஅடிகொடுத்தேன் என்று சொல்லிக்கொண்டு போ" என்றார்; அவர் செய்த தண்டனை அவ்வளவே. அவன் அக்கணமே வெண்ணெயாய்ப் போயினான்; அவரை நினைந்து மனமுருகிக் கண்ணீர் வடித்துக் கொண்டே வீடுசென்றான்.

அவர் இளைப்பாறிய பின், அநுராதபுரத்தில், ஏழை பங்காளராய் வசித்தார்; அவரைச் சட்ட சபைக்குச் சனங்கள் அனுப்பினார்கள். அவர் கொழும்பில் வெள்ளையர்

### பண்டிதமணியின் பிறந்தநாள் இன்று

வீடுகளில் தங்குவார். அவர்களின் குளிப்பறைகளில் கழித்து விட்ட துவாய்கள்,பெனியன்கள், சட்டைகள் என்றிவைகளைச் சேர்ப்பார். ஒரு லொறி கொள்ளத்தக்க அளவு வந்து விடும். அவர் திரும்புகிறார் என்றறிந்ததும்,ஏழைகள் பிள்ளை குட்டிகளோடு கொடிவிட்டு வந்து சேர்வார்கள்.அவர்ஒருசிறு குடிசையில் கயிற்றுக் கட்டிலொன்றில் படுத்திருப்பார்; சனங்கள் வந்து சேர்ந்ததும், ஒவ்வொருவரையும் விசாரித்து தான் சேர்த்துக் கொண்டுவந்த பண்டங்களை பங்கிட்டுக்கொடுப்பார். தெரிவு காலங்களில் இவரை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் கட்டுக்காசை இழப்பவராயிந்தார்கள்.அவர் தமக்கு வாக்குப்போடுங்கள் என்று கேட்பதில்லை. தமக்குரிய சின்னத்தைத் தொப்பியில் கட்டிக்கொண்டு, வாக்குப் போடுமிடத்துக்குப் போய் வருவார்; அவ்வளவே அவர் செய்வது.

ஒருசமயம் ரயிலை தடை செய்யும் எருமைகளைச் சுடவேண்டும் என்றார் சேர் பொன். இராமநாதன்; சுடக் கூடாது என்றார் பிறீமன். என்னசெய்வதென்ற கேள்வி எழுந்தது; என்ன செய்யலாமென்பதை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள் என்றார் பிறீமன்.

பத்திரிகையில் ''எருமையும் இராமநாதனும்"என்று பெரிய எழுத்தில் கட்டுரை வந்தது. நாவலர் பெருமான் இருந்தால் ''தீனதயாளு"என்ற பட்டத்தைப் பிறீமனுக்குவழங்கியிருப்பார்.

**இலக்கியகலாநிதி பண்டிதமணி**
**சி.கணபதிப்பிள்ளை**

நாவலர் வித்தியாசாலையில், நாவல் தமையனார் புதல்வர் பிறீமன் துரையின் படத்தை எல்லாரும் தரிசிக்க பிரசித்தி பெற்ற மேடையில் திறந்து வத்தார். பிறீமன் தம்மைப் படமெடுக்க இடங்கொடுப்பதில்லை. எப்படியோ யாரோ எடுத்தபடம் கிடைத்து விட்டது.

**பிறீமன்துரையின் அற்புத சரித்திரம் அநேகம். பாடப்புத்தகங்களில் அவர் சரித்திரம் வரவேண்டும்.**

---

## ஜுலை முதல் சம்பள அதிகரிப்பு வைத்தியர்களின் போராட்டம் நிறைவு

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டை நீக்கும் சுற்றறிக்கையினை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நேற்று முன்தினம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இச் சுற்றறிக்கைக்கு அமைவாக எதிர்வரும் ஜுலைமாதம் முதல் சம்பள அதிகரிப்பு நடமுறைக்கு வரும் எனவும்,

2005ஆம் ஆண்டில் இருந்து சம்பள அதிகரிப்பிற்கான நிலுவை பகுதி பகுதியாக வழங்கப்பட விருப்பதாகவும் சுகாதார அமைச்சர் பீதயாரத்னா கூறியுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவையின் தீர்மானத்திற்கு ஏற்ப அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கவிருப்பதாகவும் இதனால் அவர்களின் சம்பள முரணபாட்டுப்பிரச்சினைதீர்ந்துவிட்டதாகவும் வைத்திய அதிகாரிகளின் சங்க ஊடகப் பேச்சாளர் டாக்டர் உதித்தகேரர் தெரிவித்தார்.

அதற்கமைய கடந்த 10ஆம் திகதி முதல் இடம்பெற்று பின்னர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வைத்தியர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-10)

## பொதுவள முகாமைத்துவ செயற்திட்டங்களுக்கு உதவி

### உலகவங்கி வழங்கும்

(கொழும்பு)

பொதுவள முகாமைத்துவ செயற்றிட்டங்களை உருவாக்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை உலகவங்கி வழங்குமென உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நாடுகள் தமது நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக சுயமான திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்பதை உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றதாகவும் பீற்றர் ஹரோல்ட் கூறியுள்ளார்.

அந்தவகையில், இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உலகவங்கி நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குமென்றும் பீற்றர் ஹரோல்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## குருநகர் பாடுமீன் வி.க. 3 வருடங்கள் விளையாடத் தடை

(சுண்டுக்குளி)

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கும், அதில் அங்கம் வகிக்கும் வீரர்களுக்கும் 3 வருடங்களுக்கு போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி, யாழ.துரையப்பா விளையாடரங்கில் நாவாநதுறை சென்.நீக்கிலஸ் அணிககும், குருநகர் பாடுமீன் அணிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டபோட்டியில் கருத்து முரண்பாடு காரணமாக ஏற்பட்டமோதலையடுத்து, உதைபந்தாட்ட லீக்கின் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுவின் தலைவர் எஸ்.ரி.கணநாதன், மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பின்பு இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.

தவிர இவ் அசம்பாவிதங்களில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் என இனங்காணப்பட்ட வி.நிகால் எடிசன், ஜெ.கப்ஸ்ரண், எஸ்.சுஜீவன், எல்.கமிலஸ், பிரதீப் மொரீலாடியஸ் ஆகியவர்கள் 5 வருடங்களுக்கு விளையாடுவது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

(உ-110)

## பிரதமரின் பிரிட்டன் விஜயம் நல்ல பலாபலன்களைத் தந்துள்ளது

### நாடு திரும்பிய பீரிஸ் பெருமிதம்

(கொழும்பு)


இலங்கையில் கடந்த 18 மாதங்களாகத் தொடர்ந்து யுத்தநிறுத்தம் நடைமுறையிலிருந்து வந்துள்ளமையையிட்டு பிரிட்டிஷ் அரசு பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரிடடனிற்கு3 நாள் உத்தியோக பூர்வ விஜயம்ஒன்றை மேற்கொண்டு விட்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியபோது ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் பிரிட்டிஷ் விஜயம் சிறந்த பலாபலன்களைப் பெற்றுத்தந்துள்ளது.

இலங்கையில், நீண்டகாலமாக முடிவுக்கு வராத யுத்தம் கடந்த 18 மாதங்களாக முடிவிற்கு வந்துள்ளமையையிட்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமையையிட்டும் பிரிட்டிஷ் அரசாங்கம் மகிழ்ச்சி அடைந்துள்ளது.

தொடர்ந்தும், யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதோடு இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்த தாம் பூரண ஒத்துழைப்பை வழங்க விருப்பதாக பிரிட்டிஷ் அரசு பிரதமரிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.



(வ-10)

## பண்டிதமணி நினைவுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டித மணி சி.கணபதிப்பிள்ளையின் 104வது பிறந்ததினத்தை ஒட்டி பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையினரால் எதிர்வரும் ஜுலை மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

(உ-8)

## காட்டுமலைக் கந்தன் ஆலயத்தில் நாளை தேர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நாளை மு.ப.10மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளையதினம் பகல், விசேட மேளக்கச்சேரி மற்றும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் ஸ்ரீ.தர்சனின் இசைக் கச்சேரி என்பனவும் இரவு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மாவின் இசைச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

(உ)

## தலதா மாளிகை குண்டுத் தாக்குதல் சாட்சியப் பொருளாக வீடியோப்படம் முன்வைப்பு

(கண்டி)

சிறி தலதா மாளிகை குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின்போது வீடியோப் படம் ஒன்று சாட்சியப் பொருளாக முன்வைக்கப்பட்டது.

1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி தலதா மாளிகையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிய வீடியோப் படத்தை கண்டி மேல்நீதிமன்ற நீதிவான் டி.எஸ்.கி.லேக் கம்வாசம் பார்வையிட்டார்.

முப்பது நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படத்தை நிமால் நிஷாந்த பீரிஸ் என்பவர் எடுத்திருந்தார். பிரதி சொலிசிற்றர்ஜெனரல் அவரை விசாரணை செய்தபோது குண்டு வெடித்த சிலநிமிடங்களுக்குள் தாம் ஸ்தலத்துக்கு விரைந்ததாகவும் சேதங்களையும் அப்போது அங்கு நடந்த செயற்பாடுகளையும் படமாக்கியதாகவும் தெரிவித்தார்.

இந்தப்படத்தை தயாரித்து சாட்சியமாக முன்வைத்தமைக்காக நீதவான் அவருக்கு நன்றி தெரிவித்தார்.

பிரதி சொலிசிற்றர் ஜெனரல் புவனேக அலுவிகார, தியவதன நிலம நிரஞ்சன் விஜரட்ண மற்றும் எதிர்த்தரப்பு வழக்கறிஞர் ஏ.விநாயக மூர்த்தி ஆகியவர்கள் படத்தைப் பார்த்தார்கள்.

சுப்பிரமணியம் ரவீந்திரன், முத்துலிங்கம் ஜீவராஜ், முத்துசாமி சுப்பிரமணியம் மற்றும் இராமச்சந்திரன் ஆகியவர்கள் இந்த வழக்கில் எதிரிகளாக நிறுத்தப்பட்டுள்ளனா.

(பி)

# இலங்கையில் சமாதானம் மலர பிரி. எதிர்க்கட்சியும் பூரண ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு பிரிட்டன் அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பிரிட்டனின் எதிர்க்கட்சியும் தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

கடந்த 22ஆம் திகதி பிரிட்டனிற்கு 3 நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரிட்டனின் எதிர்க்கட்சித் தலைவர் டன்சன் ஸ்பிக் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

இலங்கையில் மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் தமது பூரண ஆதரவை வழங்கிவருகின்றதுடன், நிதியுதவிகளையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு இதனை உறுதிப்படுத்துகின்றது.

எனவே, சமாதானத்தை நிலைநாட்டி அபிவிருத்தியை மேற்கொள்ளும் இலங்கை அரசின் திட்டங்களுக்கு எமது பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுநலவாய நாடுகள்அமைப்பின் செயலாளர் நாயகம் டொன் மஜ்யுரலையும் சந்தித்துப் பேசியதாகவும் அவரும் இலங்கைச் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவை வழங்குவதாக உறுதியளித்ததுடன் இலங்கைக்கு எத்தகைய உதவிகள் தேவை என்பதை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## அரசியல் நிலைவரம் அறிய அடுத்த வாரம் அகாஷி வருகிறார்

(கொழும்பு)




ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி அடுத்த வாரம் கொழும்பிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என ஜப்பான் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விஜயத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரை சந்தித்து தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக ஆராயவுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-8)

## பொலிஸ் சேவை மறுசீரமைப்பு பிரிட்டனில் பிரதமர் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் சேவை மறுசீரமைக்கப்படவேண்டியதன் தேவைப்பாடு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரிட்டன் நீதி விவகார மற்றும் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் சல்பினல் பிரவிற்கும் இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக பிரதமரின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலிஸ் சேவை மக்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கான திட்டமொன்றை தயாரிக்கவுள்ளதாகவும் அதற்கு பிரிட்டன் தனது பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## சக ஊழியர் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து குடாநாட்டு கிராம அலுவலர்கள் பகுதி நாட் கூட்டத்தை புறக்கணிப்பு

(தென்மராட்சி)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் சுழிபுரம் மத்தி கிராம சேவையாளரான நா.குமர குருநாதன் (வயது 47) இம்மாதம் 10ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டமையை ஆட்சேபித்து யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த 420ற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர்கள் நேற்று முன்தினம் தத்தம் பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற பகுதி நாட் கூட்டங்களைப் புறக்கணித்தனர்.

யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் புறக்கணிப்புப் போராட்டம் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் மேற்கு, சண்டிலிப்பாய், வலிகாமம் கிழக்கு, கோப்பாய், உடுவில், தென்மராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம்பெற்றது.

இப்போராட்டத்தின் காரணமாக பிரதேச செயலகங்களில் பிரதேச செயலர்களால் நடத்தப்படும் பகுதி நாட் கூட்டங்கள் இடம்பெறவிலலை.

இதேசமயம், கடத்திச் செல்லப்பட்ட கிராமசேவையாளரான குமர குருநாதன் தொடர்பாக யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர். (உ-77)

## மாணவர் மட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி எழுச்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையினால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் கட்டுரை மற்றும் பொது அறிவுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (உ)

## சமுர்த்தி வங்கி பயிற்சி நெறி

(கல்வயல்)

அண்மையில் யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற வங்கித் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான வங்கிப் பயிற்சி நெறி எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை சமுர்த்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளினால் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

அதேவேளை, இக்காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அதிகாரிகளினால் சமுர்த்தி வங்கிகள் பலவும் திறந்து வைக்கப் படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-36)

## வறிய குடும்பங்களுக்கு உதவு பொருட்கள்

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளில் வறுமைக் கோட்டின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் தொழில் தன்மையின் தேவை அடிப்படையில், பட்டினிக்கெதிரான நிறுவனம் இவ்வுதவு பொருட்களை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. (உ-36)

## கூட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையின் பொதுக் கூட்டம் நாளை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-83)

## கத்தி இன்றி இரத்தம் இன்றி களத்தில் ஆடவா!

கத்தி இன்றி ரத்தம் இன்றி
களத்தில் அடவா! – எமை
சுத்தி நிற்கும் பகையை ஓட்ட
சுழன்று ஓடி வா!

* * * *

பொங்கு தமிழ் மாட்சி காண
புதுமை காண வா! – இனி
எங்கள் வீடு எங்கள் நிலம்
எமக்கு வேண்டும் வா!

* * * *

முந்தை எங்கள் பாட்டன் வாழ்ந்த
முதுசம் தேட வா! – இனி
மந்தை அல்ல மானத் தமிழர்
மகிமை சொல்ல வா!

* * * *

அப்பன் வாழ்ந்த வீடு வேண்டும்
அன்னை மண் வேண்டும் – இனிச்
சுப்பன் வந்து சுரண்ட நாங்கள்
விடுவ தில்லை வா!

* * * *

பொங்கு தமிழ் பொங்கு தமிழ்
புதுமை படைக்க வா! – புலி
வெங்க ளத்தில் ஆடு வீர
வெற்றி சொல்ல வா!

–தமிழ் மணாளன்

## வாகனங்களை நிறுத்த படையினர் கட்டுப்பாடு

(உடுவில்)

உடுவிலிலுள்ள 513வது படையணியின் தலைமையகத்துக்கு முன்னால் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வாடகை ஓட்டோ மற்றும் கார்களை நிறுத்துவோருக்கு இராணுவத்தினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

தேவையற்ற விதத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கவோ, தேவையற்ற நபர்களை வாகனங்களில் ஏற்றி வைத்திருக்கவோ வேண்டாம் எனவும் இராணுவத்தினர் பணித்துள்ளனர்.

இராணுவ முகாமின் பாதுகாப்பிற்காக இவற்றைப் பின்பற்றுமாறு சாரதிகளை இராணுவத்தினர் கேட்டுள்ளனர். (உ-261)

## திருமலை மாவட்ட இந்து ஆலயங்களுக்கான நிதி உதவி முதலாம் திகதி அமைச்சர் நேரில் வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்ச்சி எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கோணேஸ்வர ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டுடன் நடைபெறவிருக்கின்றது. இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நேரில் இந்நிதிகளை வழங்குவார்.

அன்றய தினம் அமைச்சர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சகல இந்து ஆலயங்களின் சிவாச்சாரியார்களையும் தர்மகர்த்தாக்களையும் அறநெறிப் பாடசாலை, இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகிகளையும் சந்தித்து இந்து சமய வளர்ச்சி தொடர்பாகவும், எதிர நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார்.

திருகோணமலை மாவட்ட இந்து சமய நிறுவனங்களுக்கென மொத்தம் ரூ. 1,480,000 பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றது. (பி)

## கொயாத்தோடம் பகுதியில் இளைஞர் அடகாசம்

(பாசையூர்)

கொய்யாத்தோட்டம் பகுதியில் மாலை நேரத்தில் கூடும் இளைஞர்கள் அப்பகுதியால் செல்லும் பெண்கள் மீது அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மாலை நேரத்தில் கொய்யாத்தோட்டம் பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் கூடி அங்கு மது அருந்துவதுடன், போத்தல்களை வீதிகளில் உடைத்து அட்டகாசமும் புரிந்துள்ளனர். இவர்களின் அட்டகாசம் தாங்கமுடியாத அப்பகுதி மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (பி-72)



உள்ளூராட்சி எழுச்சி வாரத்தை முன்னிட்டு தீவுப் பகுதி தெற்கு பிரதேச சபை செயலாளர் செ.சண்முகராஜா சிரமதான நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும், மர நடுகை நிகழ்வை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.கிருஷ்ணசாமி ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். படங்கள் : கு.விஜயன்.

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்
குறள் –

# வலம்புரி

## உலகெல்லாம் ஒலிக்கட்டும்

யாழ். பல்கலைக் கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்கு தமிழ் நிகழ்வு இன்று கோலாகலமாக நடைபெற உள்ளது. சிங்களப் பேரினவாதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம் தமது உரிமைக்காக கடந்த இருபது ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடத்திவருகிறது, இப்போராட்டத்தின் ஊடே ஜனநாயக வழியிலான போராட்டங்களும் இடம்பெற்று வந்தன அத்தகைய ஜனநாயக வழியிலான போராட்டத்தின் மகுடமாக எழுச்சி பெற்றதே பொங்கு தமிழ் நிகழ்வாகும்.

ஈழத்தமிழர்களின் கொடுமுடியாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் 2001ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சி உலகெங்கும் வாழும் தமிழ் உள்ளங்களை உணர்வு கொண்டெழ வைத்தது.

அதனால், தேன்மதுரத் தமிழ் ஓசை உலகெங்கும் ஒலித்து சர்வதேசத்தை விழிப்படைய வைத்தது. சுருங்கக் கூறின் தமிழர்களைச் சுட்டுக் கொண்டழித்தபோதெல்லாம் பாராமுகமாக இருந்த சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளின் அபாரமான ஆயுதத் தாக்குதலில் திடுக்கிட்டு விழித்துக் கொண்டன.

விழித்துக் கொண்ட சர்வதேச சமூகத்திற்கு விடுதலைப் புலிகள் பயங்கரவாதம் நடத்தவில்லை, அவர்கள் உரிமைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்ற உண்மையை பொங்கு தமிழ் எழுச்சி பறைசாற்றியது.

பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளை ஈந்தளித்த் போராட்டத்தின் மகிமையை, அதன் தார்ப்பரியத்தை பொங்கி எழுந்த தமிழர்கள் உலகிற்கு புகட்டினர்.

அத்தகைய விழிப்பை ஏற்படுத்திய பெருமை யாழ். பல்கலைக்கழகத்திற்கே உண்டு. அதுமட்டுமன்றி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அந்த இனம் சார்ந்த உயர் கல்வி அமைப்பான பல்கலைக் கழகம் பூரணமாக ஆதரிக்கிறது, தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறது என்ற தகவல் சிங்களப் பேரினவாதத்தின் பிரசாரங்களுக்கு சாவுமணி அடித்தது. அவ்வகையில் உலகெங்கும், தமிழோசை பரவவைத்த பொங்கு தமிழ் எழுச்சி இன்றும் யாழ் மண்ணில் வீறுகொண்டு எழுகின்றதெனில் தமிழ் மக்கள் தங்கள் உணர்வை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவது, இன்னமும் மாயைத் தூசியால் மங்கிய பார்வையில் இருக்கும் நாடுகளை விழிப்படையச் செய்வதுடன் குடியிருந்த சொந்த மண்ணில் சுதந்திரமாகச் சுவாசிக்கும் உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க உதவும்.

# பொங்கு தமிழ் நிகழ்வில் உணர்வை வெளிப்படுத்த அனைவரும் அணிதிரள்வோம்

**யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக குடா நாட்டில் உள்ள பொது அமைப்புக்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.**

### தொழில் நுட்பக் கல்லூரி

யாழ்.பல்கலைக் கழக சமூகமானது ஆரம்பித்து வைத்த பொங்கு தமிழ் நிகழ்வை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களாகிய நாம் அவர்களுடன் இணைந்து உணர்வு பூர்வமாக நடாத்தும் மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வானது உலகின் அனைத்து தேசத்திலும் வாழும் தமிழர்களின் உணர்வுகளை மறுபடியும் ஒருமுறை ஓங்கி ஒலித்து நிற்கின்றது என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகின்றோம்.

அன்று அடக்கு முறைகளுக்கு மத்தியில் பொங்கிய பொங்கு தமிழ் இன்று மீண்டும் ஒருமுறை பொங்கியுள்ளது. இப் பொங்கு தமிழ் நிகழ்விற்கு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களாகிய நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.''நமது வீடுகளில் நாம் வாழ்வதற்காக இராணுவம் உங்களது வீட்டுக்குச் செல்லுங்கள்'' அகிம்சை வழியில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் எடுக்கப்படும் பொங்கு தமிழ் நிகழ்வு சிறப்புற இன்று பிற்பகல் 3.30மணியளவில் அனைத்து தமிழ் பேசும் மக்களுடன் அணிதிரள்வோம்.

### நீதி-சமாதான ஆணைக் குழு

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் உரிமை மறுப்பினால் ஒடுக்கப்பட்டு,ஒதுக்கப்பட்டு உடல் உள சுமைகளை சுமந்தது போதும் பிறர் அதைச் சுமத்தியதும் போதும்.

சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ நமக்குள்ள உரிமையை மறுப்போர் உணர்ந்து மதிக்கட்டும். அனைத்துலக சமூகமும்,அங்கீகரிக்கட்டும்.

தமிழ மக்களின் தன்மான உணர்ச்சி உரிமை வேட்கையுடன் கலந்து பொங்கி எழுகின்றது.பொங்கு தமிழ் நிகழ்ச்சி மூலம் இதை வெளிச்சப்படுத்துவோம்.

தமிழ் மக்கள் யாவரும் தம் கூட்டுப் பொறுப்பை உணர்ந்தவர்களாய் இந் நிகழ்வில் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அமைதி அறத்தைப் பேணி ''பொங்கு தமிழ்-2003''விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் கோருகின்றோம்.

### முச்சக்கர ஊர்தி சங்கம் கோரிக்கை

இனபபிரச்சினைக்கான தீர்வினை நாம் விரைந்து காணவும்,உலக சமுதாயம் எம் உணர்வை உணர்ந்து கொள்ளவும் உந்துசக்தியாக உள்ள பொங்கு தமிழ் விழாவில் அனைவரும் உணர்வுபூர்வமாக கலந்து கொள்வோம் என வடமராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஓட்டோ உரிமையாளர்கள் தமதுஓட்டோ சேவையை இடைநிறுத்தி பொங்கு தமிழ எழுச்சி நிகழவில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் எனசங்கம் கேட்டுள்ளது (பி)

### கிறிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து கிறிக்கற் சுற்றுப் போட்டியில் நாளை இரு போட்டிகள் நடைபெற உள்ளன.

காலை 9.00மணிக்கு நடைபெறும் போட்டியில் கைதடி பிக்பூட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நுணாவில் ஸ்ரீ பாரதி விளையாட்டுக் கழகமும் மாலை 3.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாவற்குழி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (த-5)

### மட்டுநகரில் பேரணி

(மட்டக்களப்பு)

போதைப் பொருள் தடுப்புத் தினத்தை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு ஓட்டமாவடியில் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதேவேளை இத்தினத்தை முன்னிட்டு ஓட்ட மாவடிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் வெ.தவராசா தலைமையில் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது (த)

## ஜனாதிபதியின் பிரதிநிதிக்கு இடமளிக்கும் வகையில் பேச்சில் இருந்து பீரிஸ் விலகி பின் ஆசனத்தில் அமரவேண்டும்

### சமாதான முன்னாள் மத்தியஸ்தர் கருத்து

(கொழும்பு)

1990ம் ஆண்டில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் மத்தியஸ்த பணியில் ஈடுபட்டிருந்தவரான அருளர் அருட்பிரகாசம் சமாதான அனுசரணை முயற்சிகளில் மீண்டும் ஈடுபடுவதற்கு தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அருளர் கருத்து வெளியிடுகையில்,

அரசியல் யாப்பிற்கு உட்பட்ட வகையில் கணிசமான அளவு அதிகாரங்களுடன் ஒரு இடைக்கால நிர்வாகத்தை நிறுவுதலில் தடங்கலேதுமில்லை. ஆனால் அதற்கு பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும். அத்துடன் இரு தலைவர்களும் தமக்கு தடையாய் இருப்பவற்றை அகற்றுதலும் வேண்டும்.

முதலில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பின்னாசனம் ஒன்றில் உட்கார்ந்து கொள்ள வேண்டும் அத்துடன் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர் பேச்சுவார்த்தைக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இரண்டு கட்சிகளுமே பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருப்பதற்கு காரணமாகும். அரசாங்கம் ஒரு புறம நாட்டை பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி செய்வதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. மறுபுறம் புலிகள் வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் அக்கறையாய் இருக்கின்றனர்.

நிலைநாட்டப்படாத சமாதானம் முறிவடைந்து விடும் ஆபத்தைக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக நான் பிரதமர், ஜனாதிபதி, விடுதலைப் புலிகள், நோர்வே அனுசரனையாளர் ஆகியோரைச் சந்திக்க உள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (உ)

## புரிந்துணர்வுடன் செயற்பட புலிகள்- அதிரடிப்படை பேச்சளவில் இணக்கம

(மட்டக்களப்பு)

இனிவரும் காலங்களில் எவ்வித பிரச்சினைகளும் இன்றி புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கு விடுதலைப் புலிகளும் விசேட அதிரடிப் படையினரும் இணங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளிற்கும் விசேட அதிரடிப் படையினருக்குமான சந்திப்பிலேயே இணக்கம் காணப்பட்டது.

இருதரப்பும் சுமூகமான உறவைப் பேணுவதுடன் பிரச்சினைகள் தொடர்பாக புரிந்துணர்வுடன் செய்றபட தகுந்த தீர்வை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதிரடிப் படையினரும் விடுதலைப் புலிகளும் மாதம் ஒரு தடவை இவ்வாறான சந்திப்பை மேற்கொண்டு பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி றமேஸ் தலைமையிலும் விசேட அதிரடிப் படை தரப்பில் காரைதீவு விசேட அதிரடிப்படை அதிகாரி செனவரெத்தின தலைமையிலும் பங்குகொண்டனர். (உ-14)

### தினசரி தியானம்

### ஆற்றலுடன் செயல்படுங்கள்

உங்களது எண்ணங்கள், செயல்கள் வழியாக வேகமாக வெளிப்படட்டும். வாழும்காலத்தில் எண்ணங்கள் ஒழுக்கங்களாக மாறுகின்றன. எனவே ஆற்றலுடன் செயற்படுங்கள். தோல்வியை ஏற்காதீர்கள். வெளிச்சத்தை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளீர்கள். முன்னேறிச் செல்லுங்கள்.அங்குலம் அங்குலமாகவோ அல்லது வேகமாகவோ முன்னேற்றம் அமையலாம். நிறைவான பண்பைப் பெறும், நோக்கம் நிறைவேறும்வரை மேலும் மேலும் செல்லுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## தாப்ரூவின் பூதவுடலுக்கு பிரதமர் ரணில் சார்பில் கரு இறுதி அஞ்சலி

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட தெஹிவளை பொலிஸ் நிலையத்தின் விசேட புலனாய்வுப் பொறுப்பதிகாரி நிமால் தாப்ரூவின் பூதவுடலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் சார்பில் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரியா இறுதி அஞ்சலி செலுத்தினார்.

நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் கரு ஜெயசூசியா லண்டன் சென்றிருக்கும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தாப்ரூவின் குடும்பத்திற்கு அரசாங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளதாக கூறினார்.

இதேவேளை இவ்வஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா அத்தகைய படுகொலைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் விசேட திட்டமொன்றை அமுல் செய்யவுள்ளது.

அத்துடன் தெஹிவளை பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி நிமால் தாப்ரூவின் கொலை தொடர்பாக தீர ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு எனக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார் என்றார். (உ-10)

## படையினர் கெடுபிடி படகுகள் பல சேதம்

### கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கரையோர மீன்பிடிப் படகுகள் மீது கடந்த செவ்வாயன்று படையினரால் மேற்கொள்ளப்பட்ட அடாவடித் தனமான சோதனை நடவடிக்கைகள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நேற்று முன்தினம் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை அதிக அளவு படையினர் குவிக்கப்பட்டு இழுவைப்படகுகள் மற்றும் மீன்படி உபகரணங்கள் என்பன சேதம் ஏற்படும் அளவிற்கு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டபோதிலும் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை படையினரால் கடுமையாக சோதனைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்வற்காக நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் சென்றனர்.

இம்முறைப்பாட்டினை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்கச் சமாசச் செயலாளர் மற்றும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் உட்பட குழுவினர் சென்று செய்துள்ளனர் (உ-4)

# புலிகள்-படையினர் நேற்று திருமலையில் வாய்த்தர்க்கம்

## கிரனெற் வீச்சும் நடந்தது

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கிரனெட் வீச்சில் முடிவடைந்தது.

மேற்படி சம்பவம் திருகோணமலை கிண்ணியா குரங்கு பாஞ்சான் குளம் பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரட்ணா விடுதலைப் புலிகளே இராணுவத்தினர் மீது கைக்குண்டை வீசியதாகவும் ஆனால் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிவித்தார்.

இராணுவப் பேச்சாளரின் குற்றச்சாட்டை மறுத்த புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், 30க்கும் மேற்பட்ட படையினர் ஆயுதங்களுடன் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்ததாகவும் அதைத் தாங்கள் தடுத்து நிறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்விடயம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலெனவும் இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஈ.பி.டி.பி.யினர் விநியோகித்த துண்டுப்பிரசுரம் எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி அமைப்பினர் தமது யாழ். தலைமை அலுவலகத்துக்கு முன்பாக நின்று துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த போது இனந்தெரியாத இளைஞர்களால் அவை பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தை அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு வந்து நிலைமையை அவதானித்து சம்பவத்தைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை தாம் பொது மக்களுக்கு விநியோகித்த துண்டுப் பிரசுரங்களையும் தாம் வைத்திருந்த பிரசுரங்களையும் பலாத்காரமாக பறித்து தீயிட்டுக் கொளுத்தியவர்கள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று குற்றம் சாட்டியுள்ள ஈ.பி.டி.பி. அமைப்பினர் சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (இ)

# செய்முறைப் பரீட்சை அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சங்கீதம், பரதநாட்டியம் மனைப் பொருளியல் ஆகிய பாடங்களில் தோற்றிய மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் அடுத்த மாதம் 14ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

சங்கீதம், பரதநாட்டியம் ஆகிய பாடங்களில் தோற்றிய மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், மனைப் பொருளியற்கான செயல்முறைப் பரீட்சை திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

இச் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும்படியும் அவர்களிற்கான அனுமதி அட்டைகள் தபால்மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும்,யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-5)

# சமாதானத்தை தெருக்களில் பகிர்ந்து கொள்ளல்-கருத்தரங்கு

(தென்மராட்சி)

சமாதானத்தை தெருக்களில் பகிர்ந்து கொள்ளல் பற்றிய செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5மணி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறும் இச் செயலமர்வில பொது மனப்பாங்குடன் பொதுக் குரல் எழுப்பி இணக்கப்பாட்டுக்கு வரும் வரையிலான கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளன.

நாட்டின் அவசர வேண்டுகோள் எனும் தலைப்பில் கீயுடெக் பணிப்பாளர் வண.பிதா சி.ஜி.ஜெயக்குமார் அடிகளும யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ப.பகீரதனும்,தென்பிரதேசத்தின் அபிப்பிராயம் என்னும் தலைப்பில் வண.அட்டமுனே ஆனந்ததேரரும், அதிகாரப் பகிர்வும் அரசியல் யாப்பு சீர்திருத்தமும் எனும் தலைப்பில் சேவக யொகான் தேவானந்தாவும் கருத்துரைகள் ஆற்றவுள்ளனர்.

இச செயலமர்வில் பங்கு கொள்ளும் பொருட்டு தென் பகுதியில் இருந்தும் இந்து,கிறிஸ்தவ,முஸ்லிம்,பௌத்த பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## லொட்ஜ் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தெஹிவளை பொலிஸ்நிலையக் குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்புருவை சுட்டுக் கொன்றதாகக் கருதப்படும் மதன் என்று அழைக்கப்படும் கிருபாகரன் கடந்த 6 மாதங்களாகத் தங்கியிருந்த லொட்ஜ் ஒன்றை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள லொட்ஜ் ஒன்றிலேயே மதன் தங்கியிருந்ததாக பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

சுனில் தாபுருவை சுட்டுக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் மதன் என்பவரை அடுத்த மாதம் 8-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

# தொண்டர் ஆசிரியர்களின் அவசர கலந்துரையாடல்

(கொக்குவில்)

தீவக வலயப்பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருப்போரில் கடந்த வாரம் நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்காதோருக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நியமனம் கிடைக்காதோர் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. (உ-243)

# வாழ்வுக்கு ஒரு வருடம் புகைப்பட கண்காட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சமாதான முயற்சிகளைச் சித்திரிக்கும் மாபெரும் புகைப்படக் கண்காட்சி இன்று நடைபெறவுள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின் இடம்பெற்ற சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் தத்ரூபமாக சித்திரிக்கும் வகையிலான "வாழ்வுக்கு ஒரு வருடம்" எனும் தலைப்பில் இப்புகைப்படக் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

வீடமைப்புத் திணைக்களம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை கண்காட்சி இடம்பெறும். (த-14)

---

## இன்று..

யாழ்.குடாநாடு தழுவிய வகையில் உணர்வு பூர்வமாக இடம் பெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நிகழ்வில கலந்து கொள்வதற்காக தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து வருகை தரும் பொது மக்கள் மாணவர்கள் அனைவரும் திருநெல்வேலிச் சந்தி,பரமேஸ்வராச் சந்தி,கலட்டிச் சந்தி,கொக்குவில் சந்தி ஆகிய இடங்களிலிருந்து ஊர்வலமாக பல்கலைக்கழக மைதானத்தைச் சென்றடைவர்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர்

---

## விசாரணை..

கொடுத்த தகவல்களை வைத்தே நாங்கள் முதலில் ஆராய்ந்தோம். அந்த இடத்திற்குப்பின்னர் வான் வழியாகச் சென்று அவதானித்தோம்.

இக்கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அறிக்கையை இன்று விடுதலைப் புலிகளிடமும் அரசாங்கத்திடமும் கையளிக்கவிருக்கிறோம். கப்பலில இருந்த புலிகள் கப்பலைத் தகர்த்துவிட்டு சிறிய இழுவைப் படகில் தப்பிச் சென்றிருக்கலாம் என்று கடற்படை கூறுகின்றது.

ஆனால் அப்படி எந்தச் சிறிய படகும் சம்பவ நேரத்தில் இருக்கவில்லைஎன புலிகள் கூறுகின்றனர்.

# ஆலய குரு மரணம்

(பருத்தித்துறை)

திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக இளம் ஆலயக்குரு ஒருவர் நேற்று மரணமானார்.

பருத்தித்துறை இலட்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த தியாக


## நல்லூர் பிரதேச சபை

### ஆதன வரி அறிவித்தல் 2003

#### நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

2003-ம் ஆண்டு 2-ம் கந்தாயங்களுக்கான ஆதன வரியை 30.6.2003-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

[illegible] காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் -15%

சந்தி,கொக்குவில் சந்தி ஆகிய இடங்களிலிருந்து ஊர்வலமாக பல்கலைக்கழக மைதானத்தைச் சென்றடைவர்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் டி.பகீரதன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகும்.

பொங்கு தமிழ் எழுச்சிப் பாடல்கள் இசைக்கப்பட்டு மக்கள் உறுதி எடுக்கும் நிகழ்வு இடம் பெறும்.

தொடர்ந்து நிகழ்வின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் பொங்கு தமிழ் பிரகடனம் வெளியிடப்படும்.

குடாநாட்டின் வலிவடக்கு,வலி கிழக்கு,வலி தெற்கு,வலி மேற்கு, தீவகம்,தென்மராட்சி மற்றும் வடமராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து மக்களை அழைத்து வருவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிகழவின் சிறப்பினால் யாழ்.குடாநாடே விழாக் கோலம் பூண்டுள்ளது. குடாநாட்டின் வர்த்தக நிலையங்கள்,அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள்,வங்கிகள் தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் தமது வழமையான சேவையை நிறுத்தி நிகழ்வில் பங்கேற்கவுள்ளன.

பொங்கு தமிழ் நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும் விரிவான முறையில செய்யப்பட்டிருப்பதுடன் அவை முழுமையாக பூர்த்தியாகியிருப்பதாகவும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சர்வதேச முக்கியம் பெறும் இவ் எழுச்சி நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் தென்னிலங்கைப் பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வு நிறைவு பெற்றதும் பொது மக்கள் அனைவரும் உடனடியாகவே வாகனங்களில் வீடுகளுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நிகழ்வு அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

தகர்த்துவிட்டு சிறிய இழுவைப் படகில் தப்பிச் சென்றிருக்கலாம் என்று கடற்படை கூறுகின்றது.

ஆனால் அப்படி எந்தச் சிறிய படகும் சம்பவ நேரத்தில் இருக்கவில்லைஎன புலிகள் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒரு முக்கியமான உடன்பாட்டுக்கு வர வேண்டிய அவசர தேவை இருக்கிறது என்பதையே காட்டுகின்றது. இதனை நானும் ஒப்புக் கொள்ளுகின்றேன். இது பற்றி இரண்டு தரப்புடனும் பேசி வருகிறோம் என்றார் ஹொக்லாண்ட்.(முன்னர் வெளியான செய்தி 2-ம் பக்கத்தில்) (த)

---

## புலனாய்வு...

பிரதமரின் ஆலோசனையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவு புலனாய்வு உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.அவர்களில் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்கனவே இருந்தவர்கள்.

மேலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமது அமைப்பில் இருந்து கொண்டே புலனாய்வுத் தகவல்களை எமக்குத் தந்தவண்ணம் உள்ளனர்.

இவ்வாறு தகவல்கள் தருபவர்களின் பாதுகாப்பில் சில சிக்கல்கள் தோன்றியுள்ளன.

எவ்வாறெனினும் புலனாய்வு உறுப்பினர்களின் படுகொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருந்தால் அதனை உடனடியாக நிறுத்துமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலம் விடுதலைப் புலிகளைக் கோரியுள்ளோம்.

ஆனால் இந்தக் கொலைச் சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும இல்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

உட்பூசல்கள் காரணமாகவே இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம் பெறறு வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.இப்படுகொலைக்குக் காரணம் எதுவாக இருந்தாலும் நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய அவசர தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார். (த)

(பருத்தித்துறை)

திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக இளம் ஆலயக்குரு ஒருவர் நேற்று மரணமானார்.

பருத்தித்துறை இலட்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த தியாக அமிர்த கடீசக் குருக்கள்(வயது30) என்பவரே மரணமானவராவார்.

இவருக்கு திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனளிக்காததால் அங்கு மரணமானார்.

இவரது மரணவிசாரணையை பருத்தித்துறை பதில் நீதிவான் ஜேறிகொண்டபின் சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-5,52)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற இளைஞன் காலில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 11மணியளவில் ஈச்சமோட்டை பகுதியில் இடம் பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா கரன் (வயது 24) என்பவரே படுகாயம் அடைந்தவராவர். (உ-35)

---

## புலிகளுக்கு...

பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

இருதரப்பினாலும் மேற்கொள்ளப்படும் கடித பரிமாற்றங்கள் சாத்தியமற்றவை என்பதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எந்த ஒரு சூழ்நிலைகளிலும் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்றும் கூறினார்.

இதேவேளை,அரசு கொண்டுள்ள ஆலோசனைகள் குறித்து பிரதமரால் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் முடிவுகளும் பிரதமரால் ஜனாதிபதிக்கும் தெரிவிக்கப்படும் எனவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

2003-ம் ஆண்டு 2-ம் கந்தாயங்களுக்கான ஆதன வரியை 30.6.2003-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | -15% |
| ஏனைய காணிகள் | -20% |

நிலுவை உட்பட 2003-ம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987-ம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.134(5)இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

**செல்லையா செல்வரத்தினம்**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை**

**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி,**
**26.06.2003.**

(C-6361)

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ தியாக அமிர்த கடீசக் குருக்கள்

அல்வாய் சாமனந்தறை ஆலடிப்பிள்ளையார், அல்வாய் அயித்தியபுலம் ஸ்ரீ முருகன் தேவஸ்தானம், அவ்வொல்லை பிள்ளையார் தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதம குருவும், தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய உதவிக்குருவும்,

இலட்சுமணன் தோட்டம் தும்பளையைச் சேர்ந்த தியாகராஜாக் குருக்கள் அமிர்த கடீசக் குருக்கள் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜாக் குருக்கள் இராஜலட்சுமி அம்மா ஆகியோரின் அன்பு மகனும் கனகாம்பிகை அம்மாவின் பாசமிகு கணவரும், ஹம்சாயினியின் அன்புத் தகப்பனாரும் சோமாஸ்கந்த ராஜக் குருக்கள் (ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும் நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குருவும்) இரகு விஜயலட்சுமி (லண்டன்), சிவராஜக் குருக்கள் வரலட்சுமி ஆகியோரின் சகோதரரும் சோமசுந்தரக் குருக்களின் பெறாமகனும், பரமேஸ்வரன் ஜயாவின் மருமகனும், இரத்தினேஸ்வரனின்(குகன்ஜயா)மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.06.2003 காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

**சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்த ராஜக் குருக்கள்**
(ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி) (சகோதரன்)
இலட்சுமணன் தோட்டம்,
தும்பளை,பருத்தித்துறை.

(C/6362)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.